அரசியல்துறை

# விடுதலைப்புலிகள்

குரல் 91 ஆவணி — புரட்டாதி 1999 அன்பளிப்பு 5/-

**உள்ளே**

- ★ சிறிலங்கா படைகளின் அரச பயங்கரவாதம்.
- ★ சிறுவரின் வாழ்வாதாரத்தை போராதாரமாக ஆக்கும் அரசு.
- ★ வழித்தடம்.
- ★ விரிகின்ற புலிகளின் போரரங்கும் எழுகின்ற புதிய இராணுவ யதார்த்தமும்.
- ★ சிறிலங்கா அரசினால்.
- ★ குருதிச்சுவடுகள்.
- ★ உலைக்களம்.

# போர் - அரசியல் - பிரச்சாரம் மும்முனைகளிலும் அரசு திண்டாடுகின்றது

சந்திரிகா அரசாங்கத்தின் ஐந்துவருட ஆட்சி எதைச் சாதித்துள்ளது! என்ற எதிர்க்கட்சிகளின் கேள்விக்கு விடைகூற அரசாங்கம் திணறுகின்றது.

கணிசமான அளவு தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து சர்வதேச ரீதியாக புலிகளை பெருமளவில் ஓரங்கட்டியது என இரண்டு விடயங்கள் பதிலாகக் கூறப்பட்டுள்ளது, சிங்களமக்களுக்கு எந்த ஒரு நன்மையும் செய்யவில்லை என்பதை அரசாங்கத்தின் பதில் காட்டுகின்றது.

இந்த ஐந்து வருடங்களையும் பொறுத்தவரை சந்திரிகா அரசாங்கத்தின் பிரதான வேலைத் திட்டமாக புலிகளுடனான போரே இருந்துள்ளது.

போரை வென்று புலிகளை அழித்து- போருக்குச் செலவிட்ட பணத்தை அபிவிருத்திக்குப் பயன்படுத்தி--- என்று சிங்கள மக்களுக்கு அரசாங்கத்தின் வேலைத் திட்டங்கள் பற்றிக் கூறப்பட்டிருந்தது.

## போர்

முன்னைய அரசாங்கத்தின் 17 வருட ஆட்சியில் புலிகளுடன் நடந்த போரில் கொல்லப்பட்ட படையினரது எண்ணிக்கையை விட சந்திரிகா அரசாங்கம் நடாத்திய 4 வருடப்போரில் கொல்லப்பட்ட படையினரது எண்ணிக்கை அதிகம் என புள்ளி விபரங்களை முன்வைத்து ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தங்களுடைய ஆட்சிக்காலத்தில் கிழக்கின் பெரும்பகுதியும் - வட, கிழக்கு தவிர்ந்த தீவின் ஏனைய பகுதிகளும் தமது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தன என ஐ.தே. கட்சியினர் வாதிக்கின்றனர்.

ஆனால் இப்போது கிழக்கின் பெரும்பகுதி புலிகளின் கைகளில் வீழ்ந்துவிட்டது; தீவின் ஏனைய பகுதிகளில் புலிகளின் ஊடுருவல் பல்கிப்பெருகி தீவு முழுவதையுமே தாம் விரும்பிய நேரத்தில் புலிகள் போர்க்களமாக்குகின்றனர் என சுட்டிக்காட்டி, சந்திரிகா அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுகின்றனர். போருக்காக பல்லாயிரம் கோடி ரூபாவை செலவிட்டும் போரைத் திறம்பட நடாத்தமுடியவில்லை என அரசாங்கம்மீது குற்றம்சாட்டப்படுகின்றது.

இந்த நிலையில், போரை அரசாங்கம் திறம்பட நடாத்தி நிலங்களைக் கையகப்படுத்தி சாதனை புரிந்துள்ளது எனக் கூறலாமா! என எதிர்க்கேள்வி எழுப்பப்படுகின்றது.

குடாநாட்டை படையினர் ஆக்கிரமித்தசெயலை தமது ஆட்சியின் பிரதான சாதனை என அம்மையார் கூற விரும்புகின்றார். ஆனால், யாழ்ப்பாணச்சமரின் போது இருந்ததைவிட, நான்கு வருட இடைவெளியில், புலிகளின் படைபலம் ஆச்சரியப்படும் அளவுக்கு வளர்ந்துவிட்டது என்பதை ஆய்வாளர்கள் ஆதாரங்களுடன் முன்வைக்கின்றனர்.



இனியும் வெல்வோம்! :-
உறுதியான தளத்தில் போர் அரங்கு!
வெற்றிகரமான நிலையில் போராட்ட அரசியல்!

முல்லைத்தீவு தள அழிப்பு-கிளிநொச்சி தள அழிப்பு-ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையை முடக்கியது என நிரூபணங்களை பட்டியலிடுகின்றனர். யாழ்ப்பாணச் சமரின்போது புலிகள் தந்திரோபாய பின்வாங்கலை நடாத்தியிருந்தனர் என்று ஆய்வாளர்கள் இப்போது ஏற்றுக்கொண்டுள்ளனர். இன்றைய போரில் அரசபடைகள் சந்தித்துள்ள தேக்கநிலையையும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

இந்தநிலையில் போரில் அரச படைகள் முன்னணியில் இருக்கின்றன என்ற கருத்தை சந்திரிகா அரசாங்கத்தைத்தவிர வேறு எவரும் ஏற்கத் தயாராகவில்லை.

## அரசியல்:-

அன்றாடப் போர் நிலவரமும்- போரின் வெற்றியுமே அரசாங்கத்தின் பெரும்பகுதி அரசியலாக இருப்பதால் அரசாங்கத்தின் அரசியல் சாதனை என்பது பூச்சியமாகவே உள்ளது.

எனினும், தமிழர் இனப்பிரச்சனைக்கு அரசியல் ரீதியாக முடிவு காண ஒரு தீர்வுத்திட்டம் தம்மிடம் உள்ளது என்று கூறி, சர்வதேச மட்டத்தில் ஒரு அரசியல் ஆதரவுச் சூழலை ஏற்படுத்தி வைத்திருந்தது.

ஆனால், அனைத்துத் தரப்பினாலும் நிராகரிக்கப்பட்ட தீர்வுப் பொதி அரசாங்கத்தாலும் கைவிடப்பட்டு இயற்கை மரணம் அடைந்தது தெரிந்ததே. அத்துடன் தீர்வுப்பொதி என்ற விடயத்தை ஒரு இராஜதந்திர காய் நகர்த்தலுக்காகப் பயன்படுத்தி சர்வதேச ரீதியில் அரசியல் ஆதாயம் தேட அரசாங்கம் எடுத்த முயற்சியே தீர்வுப்பொதி நாடகம் என்ற சந்தேகம் உலகநாடுகளுக்கு ஏற்பட்டது. புலிகளின் நிலைப்பாடான மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்தை அம்மையாரின் அரசாங்கம் நிராகரித்ததுடன் மேற்குறித்த ஐயம், உறுதிப்படுத்தப்பட்டது. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழர்களின் வாக்குகளைக் குறிவைத்து தீர்வுப்பொதி நாடகத்திற்கு புத்துயிர் ஊட்ட, அரசாங்கம் முயற்சிக்கின்றது.

## சர்வதேச பிரச்சாரம்

புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கம்-சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை அற்றவர்கள் என்ற சந்திரிகா அரசாங்கத்தின் பிரச்சாரம், கடந்த வருட தலைவரின் மாவீரர்நாள் அறிக்கையில் அடிபட்டுப் போய்விட்டது எனலாம்.

அந்த அறிக்கையில் தமிழரின் இனப்பிரச்சனைக்கு ஒரு அரசியல் தீர்வு பற்றிய ஆலோசனையும்- அந்த தீர்வை எட்டக்கூடிய வகையில் மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்தின் கீழ் பேசுவது என்ற அணுகுமுறையும் சர்வதேசத்தால்ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் இரண்டையும் சந்திரிகா அரசாங்கம் நிராகரித்து, தனதுசுயமுகத்தை உலகிற்குக் காட்டி விட்டது.

புலிகளது அலுவலகங்களை மூடவேண்டும் என்ற சிங்களத்தின் கோரிக்கைக்கு, புலிகள் தங்களது மண்ணின் சட்டத்தை மதித்து நடப்பதாக பல ஐரோப்பிய அரசுகள் பதில் அளித்து, சிங்கள அரசின் கோரிக்கையை நிராகரித்து விட்டன.

இதேவேளை, தனது அரசாங்கம் ஜனநாயகப் பண்புகளின்படி ஒழுகுவதாகவும்- வன்முறை அரசியலுக்கு எதிரானது என்றும் அம்மையார் முன்னர் செய்த பிரச்சாரத்திற்கு முரணாக அவரது அரசாங்கத்தின் செயல்கள் உள்ளதை உலகநாடுகள் கண்டுகொண்டன.

இவ்விதம் சொல்லொன்று, செயலொன்று என்ற அம்மையார் அரசாங்கத்தின் பண்பை, சர்வதேசநாடுகள் படிப்படியாக அறிந்துவருகின்றன. இதனால் சிங்கள அரசாங்கத்தின் சர்வதேசப் பிரச்சாரம், நாளுக்குநாள் பிசுபிசுத்து வருகின்றது.

இதேவேளை, புலிகள் இயக்கம் போர் அரங்கிலும் உறுதியான தளத்தில் உள்ளது. போராட்ட அரசியலிலும் நியாயமான நிலைப்பாட்டில் உள்ளது. சர்வதேச சமூகத்தின் கவனத்தையும் படிப்படியாக ஈர்த்துவருகின்றது ○

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# சிறிலங்கா படைகளின் அரசபயங்கரவாதம்

வன்னிப்போர்க்களத்தின் கேந்திரப்பகுதிகளில் ஒன்றான பள்ளமடுப்பகுதியை ஆக்கிரமிக்கப் படையினர் நடத்திய ரணகோச - 5 நடவடிக்கையை (12.9.1999 இல்) எதிர்கொண்ட புலிவீரர்கள், இராணுவத்திற்கு பேரிழப்பை ஏற்படுத்தி - நடவடிக்கையை முறியடித்து - ஒரு இராணுவத் தோல்வியை படையினர்க்கு பரிசளித்தனர். இதில் நூற்றிஐம்பதிற்கும் மேற்பட்ட படையினர் பலியாக, சுமார் 900 படையினர்வரை காயமடைந்தனர் என சர்வதேச செய்தி நிறுவனங்கள் உறுதிப்படுத்தியிருந்தன.

ஒரு பகற்பொழுதிற்குள் புலிகள் நடாத்திய மறிப்புத்தாக்குதலில் மொத்தம் 1000 படையினர் பலியாகி அல்லது காயப்பட்டு களத்தை விட்டு அகற்றப்பட்டனர்.

மன்னார் சமர்க்களத்தில் சிங்களத்தின் தரைப்படை சந்தித்த இந்த இராணுவத்தோல்விக்கு - 72 மணிநேரத்திற்குள் - சிங்களத்தின் வான்படை தமிழீழ மக்கள்மீது வான்தாக்குதலை நடாத்தி பழிவாங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மந்துவில் சந்தியில் இயங்கிய சந்தைமீது (15.9.99 காலை 10.35 மணிக்கு) கிபிர் விமானங்கள் நடாத்திய வான்தாக்குதலில் 22 பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர். 40 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

மந்துவில் சந்திப்பகுதிமீது பலரகமான குண்டுகளைவீசி படைத்தலைமை நடாத்திய இந்தப் பழிவாங்கும் தாக்குதல் திட்டம் அழிவுகரமானது நூற்றுக்கணக்கான தமிழர்களை படுகொலை செய்யும் நாசகாரத்திட்டம் அது. அந்த சதித்திட்டம் முழுமையாக நிறைவேறாமல் போனது. துயரத்திற்குள்ளும் ஒரு அதிஸ்டமாக அமைந்து விட்டது.

தாக்குதலுக்குள்ளான சந்தைக்கு இருபுறமாகவும் சுமார் 50 மீற்றர்கள் தூரத்தில் இரண்டு முன்பள்ளிகள் இருந்தன. இதே வேளை சந்தைப்பகுதி எல்லையில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் நடாத்திவரும் போசாக்கு மையம் ஒன்றும் இருந்தது.

தாக்குதல் நடந்த நேரம் முன்பள்ளிகள் இயங்கிக்கொண்டிருந்தன. போசாக்குமையமும் கர்ப்பிணிகளாலும் - குழந்தைகளாலும் நிரம்பி வழிந்திருந்தன. தாக்குதல் காரணமாக இந்தக் கட்டடங்கள் சேதமடைந்தன. சிலர் காயப்பட்டனர். போசாக்குமையமும் முன்பள்ளிகளும் மயிரிழையில் தப்பிப்பிழைத்து பேரனர்த்தம் ஒன்றைத் தவிர்த்தன.

TAMIL EELAM

புலிகளின் குரல்

போர்க்களத்தில் சிங்களப்படைகள் பேரிழப்புக்களைச், சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இராணுவ இழப்பிற்குப் பதிலடியாக தமிழரின் குடியிருப்புகள் மீது பழிவாங்கும் தாக்குதல்களை நடாத்தி தமிழ்மக்களைப் படுகொலை செய்வது சிங்களப்படைகளின் வழமையாகும். கொடூரம் நிறைந்த இந்த அரச பயங்கரவாதம் கண்டனத்திற்குரியது.

1983 திருநெல்வேலி கண்ணிவெடித்தாக்குதலில் 13 இராணுவத்தினர் பலியாக, அதற்குப் பழிவாங்கும் முகமாக மாபெரும் இன அழிப்புத் தாக்குதலை அன்றைய ஜே. ஆரின் அரசாங்கம் தமிழ் இனத்தின் மீது ஏவி பாரிய அனர்த்தத்தை தமிழர்வீடுகளில் விதைத்தது.

1985 இல், பொலிகண்டியில், இராணுவ வண்டி ஒன்றின் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் 9 படையினர் பலியாகினர். இதற்குப் பதிலடியாக அப்பகுதி சனசமூகநிலையமொன்றிற்குள் 25ற்கும் மேற்பட்ட தமிழர்களை அடைத்து வைத்து அவர்களைச் சுட்டுக்கொன்று பழிதீர்த்துக் கொண்டது.

இதேபோன்று, யாழ்தேவி இராணுவ நடவடிக்கையை புலிகள் இயக்கம் முறியடித்து இராணுவ சாதனை புரிந்த வேளையிலும், பூனகரி தளம் மீது புலிகள் தாக்கி படையினர்க்கு பேரிழப்பை ஏற்படுத்திய போதும் வான்தாக்குதல்களை நடாத்தி தமிழ்மக்களைக் கொன்று பழிதீர்த்துள்ளது.

முல்லைத்தீவுத் தளம் புலிவீரர்களின் கைகளில் வீழ்ந்தபோது ஆக்கிரமிப்பிற்குள் இருந்த குடாநாட்டில் பாரிய அளவில் தமிழர் வேட்டை நடாத்தப்பட்டிருந்தது.

இவ்விதம் தமது இராணுவ இழப்புக்களுக்கு பதிலடியாக தமிழரைக்கொன்று பழிதீர்க்கும் சிங்களத்தின் கொலைவெறிமரபைச் சுட்டிக்காட்ட, எத்தனை உதாரணங்களைக் கூறலாம்!

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் நிலத்தில் இந்த வகை கொலைவெறிப் பழிவாங்கல் தாக்குதல்கள், இன்று அன்றாட நிகழ்ச்சியாக உள்ளன.

இதேசமயம் இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் கண்மூடித்தனமான எறிகணை வீச்சுக்களை - வான்தாக்குதல்களை தமிழர் குடியிருப்புகள்மீது-ஆலயங்கள்- பாடசாலைகள்- பொது இடங்கள்மீது - நடாத்தி தமிழ்மக்களைப் படுகொலை செய்து வருகின்றது சிங்கள அரசு.

தமிழ் இனத்தின்மீது சிங்கள அரசும் - அதன் படைகளும் நடாத்திவரும் இந்தவகைப் படுகொலைகள் அடிப்படையில் 'இனஅழிப்புப் பரிமாணத்தைக் கொண்டவை. இலங்கைத்தீவில் இருந்து தமிழ்இனத்தைப் பூண்டோடு துடைத்தெறியும் சிங்கள - பௌத்த பேரினவாத நிலைப்பாட்டின் செயல்முறைவடிவம் அது.

அதேவேளை, இவ்வகை வெறிச்செயல்கள் வாயிலாக தமிழர்மண்ணில் அவலத்தை விதைத்து - அதன்மூலம் தமிழ்மக்களை அடிபணியச் செய்வித்து - அவர்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை நிலைகுலையச் செய்விக்க, சிங்களஅரசு முயல்கின்றது.

இனக்கொலைப் பரிமாணத்தைக்கொண்ட இந்த அவலவிதைப்புச் சித்தாந்தம் புலிகள் இயக்கத்தின் தலைமையில் நடைபெறும் தமிழரின் விடுதலைப்போராட்டத்தில் செல்லாக்காசாகவே இருந்துவருகின்றது என்ற உண்மையை சிங்கள அரசு இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை.

அதேசமயம், இந்தவகைப் படுகொலைகள் ~~தமிழ் - சிங்கள இனமுரண்பாட்டை மேலும் -~~ மேலும் சிக்கலான நிலைக்கே எடுத்துச் செல்கின்றன. இதற்கான முழுப்பொறுப்பையும் சிங்களஅரசே ஏற்றுக் கொள்ளவேண்டும். O

( 07ஆம் பக்கத் தொடர்ச்சி )

## சிறிலங்கா...

பாதுகாப்பு வேலிகளையும்; புலிகளின் இராணுவ மயப்படுத்தப்பட்ட பிரதேசமாகவும் (Militarized Zone) விளங்கும் மூன்றுமுறிப்பு பகுதி ஊடாக மக்களை முன்னுக்கு விட்டு எதுவித இழப்பும் இன்றி தாமும் உள்நுழையத் தயாராக இருந்தது. இதன்மூலம் மல்லாவிப் பிரதேசத்தைக் கைப்பற்றி, மக்களை தாம் மீட்டுவிட்டதாக அரசியல் இலாபம் தேட முயன்றது. இந்த நடவடிக்கையினை புலிகள் தடுத்து நிறுத்தினால் அல்லது பாதையினைத் தடுக்கும்போது ஏதாவது ஆபத்து நேர்ந்தால் அனைத்தையும் விடுதலைப் புலிகள் மீது பழியினைப் போடலாம் என பலதரப்பட்ட தந்திரோபாயங்களை உள்ளடக்கியே இதனை அரசதரப்பு திட்டமிட்டுச் செய்தது.

வவுனியாவில் இருந்து 40 பஸ் வண்டிகளில் மக்களை ஏற்றிவந்து குறித்த ஓர் பாதையினைக் காட்டி இதனூடாகச் செல்லுமாறு மக்களிற்கு காட்டியபின்பு படையினர் தாம் பாதுகாப்பாக இருந்துள்ளனர். விடுதலைப் புலிகளின் FDL இல் கடமையாற்றிக் கொண்டிருந்த போராளிகள் இந்த ஆபத்தான நிலையினைக் கருத்தில் கொண்டு மக்களை வரவேண்டாம் எனவும் இப்பாதை ஆபத்தானது எனவும் கூறுமுகமாக எச்சரிக்கை வேட்டுக்களை மேற்கொண்டனர். இதன்போது அச்சமடைந்த மக்கள அழுகைக் குரலெழுப்ப அதனைச் சிரித்தபடி பார்த்துக்கொண்ட எஸ். எல். ஏ. யினர், தமது தொலைத் தொடர்பு சாதனம் மூலம் மக்கள் அழுவதை விடுதலைப்புலிகளிற்கு கேட்கச்செய்ததோடு பாதையினைக் கிளியர் பண்ணி விடுமாறும் மக்கள் மூலம் போராளிகளிற்கு தெரியப்படுத்திக் கொண்டிருந்தனர். இதன் மூலம் புலப்படுவது என்னவெனில் எஸ்.எல்.ஏ. யினர் தமது திட்டத்தை எப்படியாவதும் நிறைவேற்ற முயற்சித்தனர் என்றே கூற முடியும்.

விடுதலைப் புலிகள் மக்களை திருப்பி அனுப்பியமைக்கான காரணம் இராணுவத்தின் நகர்வுகள் பற்றி ஏற்கனவே அறிந்தது மட்டுமல்ல; மக்களை அனுப்புவது தொடர்பான முழுமையான திட்டம் பற்றி விடுதலைப்புலிகளிற்கு முன்னரே தெரிவிக்கப்படவில்லை என்பதும், அவ்வாறு தெரிவிக்கப்பட்டாலும் முழுமையாக இராணுவ மயப்படுத்தப்பட்ட பிரதேசத்தினை அது அல்லாத பிரதேசமாக(Demilitarized Zone) மாற்றுவது சாத்தியப்படாது. எனவேதான் எச்சரிக்கைவேட்டுக்கள் மூலம் மக்களைத் திருப்பிஅனுப்ப நேரிட்டது.

எந்தவொரு நகர்வுகள் மூலமும் சிங்கள அரசும் அதன் படைத்தரப்பும் தமது தந்திரோபாயத் திட்டங்களை நகர்த்த முடியாது போனநிலையில், பாதை திறக்காமைக்கு விடுதலைப்புலிகளின் விடாப்பிடியே காரணம் என புலிகள்மீது பழியினைச் சுமத்த நினைத்த திட்டங்களும் நிறைவேறவில்லை. மாறாக வன்னியில் பொதுமக்களின் சந்திரிகாஅரசு மீதான எதிர்ப்புணர்வு மேலும் வலுத்ததுடன் அவர்களை உறுதியான தற்சார்பு நிலைநோக்கிய நகர்விற்கு இட்டுச்செல்ல வழிவகுத்தது. அடுத்த கட்டமாக புலிகள் மீது அவப்பெயரை ஏற்படுத்த முயற்சி செய்த திட்டமும் தவிடு பொடியாகி உள்ளூரிலும் சர்வதேசத்திலும் தனக்குத் தானே சேறு பூசிககொண்டது. இதற்கு P.A. அரசிற்கு எழுந்த உள்நாட்டு வெளிநாட்டு அழுத்தங்களே ஆதாரமாக அமைந்தது. அத்துடன் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறிய அதே வாய்கள், அவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய சூழலையும் தானாக ஏற்படுத்திக் கொண்டது. இந்த நிலையில் சந்திரிகா அரசினால் எதுவும் செய்ய முடியாத கட்டத்தில் விடுதலைப்புலிகளினால் ஏற்கனவே கூறப்பட்டதின்படி வவுனியா-மாங்குளம் ஏ-9 வீதியினைத் திறக்க சம்மதித்தது. இதன்படி 04.08.99 அன்று ஐ.சி.ஆர்.சி. ஊடாக எல்.பி. பல்லேகல்ல அவர்களால் தெரிவிக்கப்பட்ட செய்தியில் மாங்குளம் பாதை திறப்பிற்குச் சம்மதிப்பதாகவும் ஏற்கனவே விடுதலைப் புலிகளால் உடன்பட்டதற்கு அமைய இருபகுதியினது F.D.L. இற்கு இடையே 500 மீற்றர் நீளமும் 01கிலோ மீற்றர் அகலமும் கொண்ட பிரதேசத்தினை பொது மக்கள பாதுகாப்புப் பிரதேசமாக ஏற்றுக் கொண்டு பாதை திறக்க சம்மதம் தெரிவித்தனர். (படம்-02) சம்மதித்த கையோடு தாம் வன்னி மக்களிற்கு ஏதோ செய்து விட்டதாகவும் மனிதாபிமானத்தின் அடிப்படையில் செயற்படுவதாவும் கூறுகின்றனர் இந்த மனிதாபிமானம் வருவதற்கு சந்திரிகா தலைமையிலான அரசிற்கு 45 நாட்கள் தேவைப்பட்டன என்பதே அனைவரையும் வியக்க வைப்பதுடன், இதனால் அநியாயமாக எத்தனையோ மனித உயிர்கள் பலியாக்கப்பட்டன என்பதனையும், சர்வதேசம் கருத்தில் எடுக்க வேண்டும். O

## புரவிகள் திரும்புகின்றன

கடிவாளம் ஊசலிடத் திரும்புகின்றன
குருதிப் பொருக்குலர்ந்த புரவிகள்.

புரவிகளின் நெடுங்கால
மொழியற்ற துயர் மொத்தமும்
குளம்பொலியில் வழிகிறது.
மிகுந்த பரிச்சயமுள்ள
நடைபேசும் அமானுஷ்ய பாசை
கசக்கிப் பிழிகிறது துடிக்கும்
கையளவு இதக்களை.

உயிர்த்த வருகைவேண்டித்
தோத்திரங்கள் பாடும்
பூத்தவிழிகள் கோர்த்த வாசல்தோறும்
நறுக்கென்று ஏறித்தெறித்த முள்வலி.

புரவிகள் நடைதரிக்கும் முற்றமதியாச்
சிறுபொழுதுள்
தாளாது திரள்கிறது
மயிர் விளிம்பில் துளி கண்ணீரின்
உடைந்து சிதறும் தவிப்பு.

2

பாஞ்சசன்னியப் பெருமுழக்கம்
உலுக்கிய திசைமுகங்களில்
தீமிதியின் உக்கிரம் கொப்புளிக்கிறது.
கடிவாளத்தின் அகர உகப்பலில்
இளங்குருதித் திவலை நுரைக்கிறது.
சடைசிலுப்பித் தாவி
நர்த்திக்கும் புரவிகளின்
குளம்பொலிக்கிறது!

- எஸ். உமாஜிப்ரான்

# சிறுவரின் வாழ்வாதாரத்தைப் போராதாரமாக ஆக்கும் அரசு

- அ. தீபன் -

சிறுவர் வாழ்வு புனிதமானது. எத்தகைய கொடூர உள்ளங்களையும் இளகச் செய்யும் சக்தி படைத்தது. வளர்ந்து விருட்சமாகி மனித குலத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கும் ஜீவன்கள் இந்தச் சிறுவர்கள்தான். அதனால்தான், ஒரு சமுதாயத்தின் உயிர்நாடியாக இந்தச் சிறுவர்கள் கருதப்படுகிறார்கள். இந்த பாலகப் பருவத்தை கருகவிடாது பண்படுத்தி வளர்ப்பது என்பது ஒருஅரசின் தலையாய கடமையாகிறது.

''தாய்மை நிலையும் குழந்தைப் பருவமும் விசேட கவனிப்பிற்கும் உதவிக்கும் உரித்துடையன. சகல குழந்தைகளும், அவை திருமண உறவினுட் பிறந்வையாயினுஞ்சரி, அத்தகைய உறவின்றிப் பிறந்தவையாயினுஞ்சரி, சமமான சமூக பாதுகாப்பினைத் துய்க்கும் உரிமையுடையன'' என்கிறது ஐ. நா. சபையின் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்.

இவை இப்படி இருந்தபோதும் ஆக்கிரமிப்பாளர்களினதும், இனஅழிப்பாளர்களினதும் பிரதான குறியிலக்காக சிறுவர்களே இருந்து வருகிறார்கள். அத்தகைய அரசுகளின் விசேட கவனிப்பு என்பது ஆக்கிரமிக்கப்படும் அல்லது ஒடுக்கப்படும் தேசத்தின் சிறுவர்களை அழிப்பது என்பதாகவே அமைந்துவிடுகிறது. அதற்காகவே திட்டமிடப்பட்ட அழிப்புமுறைகள் அந்த குறிப்பிட்ட இனத்தின் மீது சுமத்தப்படுகிறது. இனக்கலப்பு என்பதன் மூலம் ஒரு இனத்தின் அடையாளங்களை அழித்துவிடுவது, பொருளாதாரரீதியில் ஒரு இனத்தை நெருக்கடிக்குள்ளாக்குவதன் மூலம் பட்டினியாலும், நோய்களாலும் சிறுவர்களை உயிருடன் வதைத்து அவ்வினத்தின் எதிர்காலச்சிற்பிகளை நலிவடையச் செய்வது, இவையெல்லாவற்றிற்கும் மேலாக கருவில் வைத்தே சிறுவர்களை அழித்துவிடுவதென ஆக்கிரமிப்பாளர்களின் படுகொலைத்திட்டங்கள் விரியும். இதே போன்றே தமிழின அழிப்பில் ஈடுபட்டிருக்கும் சிங்களப் பேரினவாத அரசும் தமிழ்ச் சிறுவர் வாழ்வை ஏப்பம் விட்டு வருகிறது.

தமிழ் மக்களை தனது பிரஜைகளாக வெளியுலகிற்கு காட்டிக்கொள்ளும் சிங்களம், இங்கோ இறுக்கமான பொருளாதார முற்றுகைக்குள் தமிழ் பிரதேசங்களை வைத்திருக்கிறது. தமிழ் மக்களுக்கான அபிவிருத்தி, புனர்வாழ்வு என்ற போர்வையில் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நிதியுதவிகள் எல்லாம் தமிழர்களின் எச்சசொச்சமாயிருக்கும் சுயபொருளாதாரத்தையும், வாழ்வையும் அழிக்கும் குண்டுகளாகவே இங்கு வந்துசேர்கின்றன. எமது மக்களின் வாழ்வியல் அவலங்களெல்லாம் அரசின் பிரச்சாரக் கருப்பொருளாகி அவர்களை மேலும் மேலும் வருத்தும் போருக்கு நிதியைத் திரட்டுவதற்காகவே சிங்களத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அவை குண்டுகளாகவே தமிழர்களின் தலைகளில் போடப்பட்டுவருகிறது. ஏதுமறியாக் குழந்தைகளைக்கூட அவை பலிகொண்டு விடுகின்றன. அல்லது பெற்றவர்களை, பாதுகாவலர்களைப் பலிகொண்டு சிறுவர்களை நடைபிணங்களாக்கி விடுகின்றன.

ஒன்றுக்குப் பலதடவைகள் சொந்த நிலங்களிலிருந்து விரட்டப்படும் மக்கள் பொருளாதார பலமற்றவர்களாக மாறிவிட்டார்கள். இந்நிலையில் பொருளாதாரத் தடைகள் மூலம் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாத நிலைக்கு நுகர்வுப் பொருட்களின் விலைவாசிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. எமது மக்கள் மீது சிங்களத்தால் திட்டமிட்ட முறையில் சுமத்தப்படும் வாழ்வியற்சுமை, ஏதுமறியா சிறுவர்கள் வாழ்வில் அவலங்களைச் சுமத்துகிறது. அதுவும், சிங்களத்தால் திட்டமிட்ட முறையில் கொல்லப்படும் கணவர்களை, உழைப்பாளர்களை இழந்து அரசால் நட்டாந்தெருவில் கைவிடப்படும் குடும்பங்களுடைய குழந்தைகளின் நிலையோ மோசமானதாகிறது. இப்படியான ஒரு அவலம் நிறைந்த வாழ்வுக்குத்தான் எங்கள் மண்ணின் சிறுவர்களுக்கு வழி விட்டுவைத்திருக்கிறது சிங்களம். இவற்றையெல்லாம் ''சமாதானத்திற்கான பலிகள்'' ஆகவும் ''சமாதானத்திற்கான சுமைகள்'' ஆகவும் அர்த்தப்படுத்திவிட முடியுமா? இவற்றிற்கு சிங்களம் கூறும் நியாயப்பாடுகளை எந்தவரையறைகளின் கீழ் சரியென ஏற்றுக்கொண்டு மனித உரிமை அமைப்புகள், சிறுவர் நலன் பேணும் அமைப்புகள் தமது கண்களையும், வாய்களையும் மூடிக்கொண்டு விட முடியும்.

''ஒவ்வொருவரும் உணவு, உடை, வீடு, வசதி, மருத்துவக் கவனிப்பு, அவசியமான சமூக சேவைகள் என்பன உட்பட தமதும், தமது குடும்பத்தினரதும் உடனலத்திற்கும், நல்வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத் தரத்திற்கு உரிமையுடையவராவர். அத்துடன் வேலையின்மை, இயலாமை, கைம்மை, முதுமை காரணமாகவும் அவை போன்ற அவரது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பிறசூழ்நிலை காரணமாகவும வாழ்க்கை வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பிற்கும் உரிமையுடையவராவர்'' என்கின்ற ஐ. நா. சபையின் அனைத்துலக மனித உரிமை பிரகடனம், அதன் உறுப்பு நாடான இலங்கையில், தமிழ் மக்களின் வாழ்வில் மட்டும் மதிக்கப்படவில்லையே?!

தென்னிலங்கையில் வசதி படைத்த சிங்கள மக்களுக்குச் செய்யப்படும் அடிப்படை வசதிகள் கூட தமிழ் மக்கள் விடயத்தில் செய்யப்படுவதில்லை. சிங்கள மக்களின் பொருளாதார முன்னேற்றங்களுக்காக விதம் விதமான திட்டங்களை முன் வைக்கும் அரசு, போர்க்களமாக்கப்பட்டு விட்ட தமிழர் தாயகப் பகுதிகளில் குறிப்பாக இன்று போர் மையங்கொண்டிருக்கும் வன்னிப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. நிவாரணத்தை மட்டுமே நம்பியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அது மறுக்கப்பட்டிருக்கிறது. அடிப்படை மருத்துவ வசதிகள்கூட தடுக்கப்படுகிறது. இவையெல்லாம் தமிழினத்தின் எதிர்கால சந்ததிகளாகிய குழந்தைகளை நலிவுறச்செய்யும் திட்டமிட்ட அழிப்பு நடவடிக்கைகளாகவே கருதவேண்டியிருக்கிறது. ஏனெனில், குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் போன்றவர்களுக்கான சிறப்புக் கவனிப்புகள்கூட இங்கே மறுக்கப்பட்டிருக்கிறது. இதுவும் சிறிலங்கா அரசு சொல்வது போல் பயங்கரவாத நடவடிக்கைகளுககு உதவுகிறதா?

'தமிழ் மக்கள் எங்களுடைய மக்கள்' என போலிக் குரலெழுப்பும் சிங்கள அரசு எங்கள் சிறுவர்களைக் காப்பாற்றும் என்று எமது மக்கள் எதிர்பார்க்கவில்லை. சிறுவர்களின் நலன்களையும், உரிமைகளையும் கவனிப்பதற்கென்றே சர்வதேச ரீதியில் அமைக்கப்பட்டிருக்கும் அமைப்புகள் கூட எமது சிறுவர்கள் விடயத்தில் உருப்படியாக எதையும் செய்யாதது கவலைக்குரியது. இத்தகைய சூழலில் சர்வதேச தமிழ்சமூகத்தின் ஆதரவுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் அதன் துணை அமைப்புகளும் வன்னிப் பகுதியில் தற்போது செய்துவரும் சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகள் எமது சிறுவர்களின் எதிர்காலத்திற்கு நம்பிக்கையளிக்க முனைகிறது.

1999 ம் ஆண்டை சிறுவர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், ஒரு வயது முதல் ஐந்து வயதிற்கு இடைப்பட்ட குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கான சிறப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. 'வன்னிச் சிறுவர் பட்டினிச்சாவு தவிர்ப்பு' திட்டத்திற்காக வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களிடம் இருந்து வழங்கப்பட்டிருக்கும் நிதியுதவியின் மூலம் 75 இற்கும் மேற்பட்ட நிலையங்களில் இதுவரை 15,000 இற்கும் மேற்பட்ட குழந்தைகளும் 4,000 இற்கும் மேற்பட்ட கர்ப்பவதிகளும் தினமும் ஒரு நேர சத்துணவைப் பெற்றுவருகின்றார்கள். மோசமான பகுதிகளைச் சேர்ந்த ஆறு பாடசாலைகளில் சிறுவர்களுக்கான இலைக்கஞ்சி வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவற்றைவிட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கீழ் ஏற்கனவே வன்னிப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாதுகாப்புத் திட்டங்கள் எமது சிறுவர்களைப் பட்டினிச்சாவு என்பதிலிருந்து மீட்பது என்பதற்கும் அப்பால் அவர்களுக்கு கல்வியறிவூட்டி ஒழுக்க சீலர்களாக வளர்ப்பதுவரை உதவி வருகிறது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் சிறப்பு சிறுவர் போசாக்கு நிலைகளின் கீழ் ஆபத்தான போசாக்குக் குறைபாட்டிற்கு உள்ளாகி இருக்கும் குழந்தைகளையும், தாய்மார்களையும் காப்பதற்காக வைத்திய வசதிகளுடன் கூடிய இரண்டு நிலையங்களும், சாதாரண போசாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்காக ஒன்பது போசாக்கு நிலையங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பராமரிக்கப்பட்டு காப்பாற்றப்படுகின்றார்கள்.

இதே போன்று, ஆறு சிறுவர் போசாக்குப் பூங்காக்களில் வறுமையால் வாடும் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் நாளாந்தம் பராமரிக்கப் படுவதோடு, சிங்களப் படைகளின் தாக்குதல்களால் தந்தையையோ, தாயையோ இழந்து பராமரிப்பற்றிருக்கும் ஆதரவற்ற சிறுவர்களின் பாதுகாப்பிற்காக சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள் ஏழு அமைக்கப்பட்டு அவற்றில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கல்வி வசதியுடன் கூடிய முழுநேரப்பராமரிப்பிற்குள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இத்தகைய திட்டங்கள் மூலம், ஐந்துவயதிற்கு உட்பட்ட முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்களைக்கொண்ட வன்னிப் பகுதியில் கணிசமான சிறுவர்களின் நலன் பேணலை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் அதன் துணை நிறுவனங்களும் செய்து வருகின்றன. சிறுவர்களின் வாழ்வுக்கான எந்தவொரு சூழலையும் அனுமதிக்காத சிங்கள பேரினவாதத்தின் படுகொலைக் குறியிலக்கிற்குட்பட்டிருக்கும் எமது மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் இச்செயற்பாடுகள எதிர்காலம் மீதான நம்பிக்கையை கொடுக்க முனைகின்றன.

தமது ஒடுக்குமுறையாளர்களிடமிருந்து ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் எதையும் எதிர்பார்க்க முடியாத சூழலில், சர்வதேச சட்டங்களையும் உடன்பாடுகளையும் அத்துமீறி இன அழிப்பில் ஈடுபட்டிருக்கும் சிறிலங்கா அரசின் செயற்பாட்டை உலக சமாதானம் பேணும் அமைப்போ, சர்வதேச மனித உரிமை அமைப்புகளோ, சிறுவர் நலன்பேணும் அமைப்போ இது விடயத்தில் அக்கறை எடுக்காத நிலை, எம்மக்களுக்கு எம்மை நாமே ஆளக்கூடிய சுதந்திர ஆட்சி மீதான கொள்கைப்பற்றையும், விடுதலை உணர்வையுமே மேலும் மேலும் வற்புறுத்தி நிற்கிறது. ○



"பட்டினி கிடந்து பசியால் மெலிந்து பாழ்பட நேர்ந்தாலும்" - பணி வோம!

# அசாத்திய ஆற்றலில் அடைந்த வெற்றிகள்

ஆனையிறவு 'கூட்டுப்படைத் தளம், அந்த ஜனவரி மாதத்து நிசப்தமான குளிரில் உறைந்து போய்க் கிடந்தது. உடலைக் குத்தி ஊடுருவும் உப்புக்காற்றின் குளிரையும் மீறி சில உருவங்கள் அங்கே எதிரியின் முன்னணித் தடைகளை நோக்கி வரிசையாக நகர்ந்து கொண்டிருந்தன.

அது ஒரு வலிந்த தாக்குதலிற்குரிய நகர்வு. இறுமாப்புடன் நிமிர்ந்து நிற்கும் ஆனையிறவுத் தளத்தின் இதயத்தில் பாய்வதற்காய் அவர்கள் முன்னேறிக் கொண்டிருந்தனர். அந்த உவர் மண் வெளியில் ஆங்காங்கே காணப்படும் கன்னாப் பற்றைகளை மறைப்பாகக் கொண்டு அவர்களுடைய அணி நகர்ந்துகொண்டிருந்தது. எதிரியின் முகாமைப் பல முனைகளில் நெருங்கிக்கொண்டிருந்த அணிகளில் பிரதான முகாமைத் தாக்கியழிக்கும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப்பிரிவின் அந்த குறிப்பிட்ட அணியை வழிகாட்டி நகர்த்திக் கொண்டிருந்தான் ஒரு வேவுப்போராளி.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. அவர்கள் எதிரியின் முன்னணித் தடை வேலியை நெருங்கியிருந்தனர். நீண்டதொரு இரகசிய நகர்வை வெற்றிகரமாகச் செய்து முடித்துவிட்ட திருப்தியில் அவர்கள் இருந்தனர். ஆனால், இன்னும் கூட அபாயம் நீங்கவில்லை. இப்போதும் எதிரியால் அவதானிக்கப்பட்டால் அவர்கள் அந்த இடத்திலேயே கொல்லப்படலாம். காவலரண்களின் முன்னால் சில பத்து மீற்றரில் அவர்கள் நிலத்துடன் நிலமாகக் கிடக்க, அவர்களை வழிகாட்டி அழைத்து வந்த போராளி கைகளில் முட்கம்பி வேலித்தடையை அகற்றும் கருவியுடன் முன்னேறினான்.

சண்டை தொடங்குவதற்கு இன்னும் சில நிமிடங்களே இருந்தன முதலாவதாக இருந்த கம்பி வேலியை வெட்டி அகற்றிவிட்டு இரண்டாவது தடைக்கு அவன் 'டோப்பிட்டோ' குண்டைப் பொருத்த, மறுமுனைகளில் சண்டை தொடங்குகின்றது. எல்லோரும் ஆவலுடன் அங்கே பொருத்திய 'டோப்பிட்டோ' வெடிக்குமெனக் காத்திருக்க, அந்த குண்டு வெடிக்காமலேயே போய் விடுகின்றது.

துப்பாக்கிகள் சடசடக்க, எதிரி வானில் ஏவிய 'பரா' வெளிச்சக் குண்டுகள் இரவைப் பகலாக்கி வானில் ஒளி வீச, அங்கே அணியினர் தமக்குரிய பாதைத் தடையை தகர்க்கமுடியாமல் இருப்பதை எதிரி கண்டுகொண்டான். தனது சூட்டுவலுவை இப்போது அந்த அணியினர்மீது எதிரி மையங்கொள்ள வைத்தான்.

நிலைமை மோசமாகிக்கொண்டிருந்தது. உள்ளே நுழையவேண்டிய அந்த அணி வழியிலேயே எதிரியின் சூட்டிற்கு ஒவ்வொருவராய் இழந்துகொண்டிருந்தது. மீண்டும் அந்த தடையைத் தகர்க்க அவ்விடத்தில் கைவசம் மேலதிக டோப்பிட்டோவோ, பின்னாலிருந்து வரவழைக்க அவகாசமோ இல்லாத இக்கட்டான நிலையில் எல்லோரும் தவிப்புடன் பார்த்திருக்க, அங்கே கைவசம் இருந்த ஒரேயொரு கம்பிவெட்டும் 'கட்டரு'டன் எழுந்தான், அந்த அணிக்கு வழிகாட்டி முன்னே நகர்ந்து கொண்டிருந்த லெப்டினன்ட் மலரவன்.

துப்பாக்கிச் சன்னங்களால் துளைத்து உடலிலிருந்து குருதி வழிய, தள்ளாடியபடி எதிரியின் தடைக்கம்பி வேலியை நெருங்கியவன், ஒவ்வொரு கம்பியாய் வெட்டத் தொடங்கினான். எதிரியின் துப்பாக்கிகள் அவன் ஒருவனையே குறிவைக்க, உடல்முழுவதும் சன்னங்களால் சல்லடையாக, அந்த சொற்ப நேரத்தினுள் தடையை வெட்டி அகற்றிவிட வேண்டும் என்ற உறுதியுடன் தடைக்கம்பிகளை வெட்டி வீழ்த்தியவாறு அந்தக் கம்பிகளின் மீதே 'சரிகின்றான் மலரவன். இறுதிக் கம்பி மட்டும் இன்னும் வெட்டப்படாமல் இருந்தது. ஆயினும் பாதை ஏற்பட்டுவிட்டது.

அவன் ஏற்படுத்திக்கொடுத்த பாதையின் ஊடாக அணிகள் உள்ளே பாய்கின்றன. அவனது தோழர்கள் அவனைக் கடந்து எதிரியின் அரண்களை நோக்கி ஓடும்போது எஞ்சிய உயிர்த்துளியில் அவனது நாவு உச்சரித்தவை இவைதான்,



கனரகச் சுடுபொறி: ரவைத் தொடுப்பி ஏற்றும் இருபுலி!

''மச்சான்! ஒன்றையும் விடாமல் பிடியுங்கோடா.''

அன்றைய அந்த அணியின் சண்டையின் முடிவை மாற்றியமைத்தவன் அந்தப் போராளி. எதிரியின் சூட்டிற்கு ஒவ்வொருத்தராய் வீழ்ந்துகொண்டிருந்த நிலையை மாற்றியது அவனது முடிவுதான்.

தன் உயிர்கொண்டு அவன் தடையகற்றத் துணிந்தமையால் தொடர்ந்து எதிரிகளை வீழ்த்திக் கொண்டு முன்னேறியது அவனது அணி. அன்றைய சண்டையில் அவர்கள் ஏராளம் இராணுவத்தை கொன்றிருந்தனர். பலம்வாய்ந்த எதிரியின் பிரதான முகாமை ஊடுருவி அவனது ஆயுதங்கள் உள்ளிட்ட ஆட்லறித் தளத்தை அவர்கள் அழித்திருந்தனர். அத்தனையையும் அன்று சாத்தியமாக்கியது, தடையகற்றி தன் சாவை சரித்திரமாக்கிவிட்ட அந்தப் போராளியின் இறுதிநேர முடிவு.

எமது விடுதலை வரலாறு பற்றி தலைவர் அவர்கள் கூறுவது போல் 'ஆயிரம் ஆயிரம் தனி மனித சரித்திரங்கள் சங்கமமாகிய பெரு நதியாக வீறு கொண்டோடும் எம் விடுதலை வரலாற்றில்' தானும் ஒருவனாய் சங்கமித்துப் போன இவனதும் இவன் போன்ற சரித்திர நாயகர்களினதும் தியாகங்களே இன்றும் எம் விடுதலை நதியை வெற்றிப் பாதையில் பிரவகிக்கச் செய்கின்றன. O

0 0 0



## படுகளம்

மட்டக்களப்பின் குறிப்பிட்ட படை முகாமான புளிக்குணாவி தளம் அமைதியாய்கிடந்தது. வெள்ளிகள் அற்ற வானம் காரிருளில் மூழ்கிக்கிடந்தது. மழை வரும் போல இருந்தது. அடிவானில்இடி மின்னல் கீற்றுக்கள் தோன்றி மறைந்தன.

நேரம் நள்ளிரவைக் கடந்திருந்தது. அணிகள் எதிரியின் தடைகளை அகற்றியவாறு முகாமினுள் ஊடுருவிக் கொண்டிருந்தன. அங்கே ஒரு பாதையில் கைகளில் டோப்பிட்டோவுடன் தடைகளை வெட்டி தனது அணியினருக்கு ஒரு பாதையை ஏற்படுத்தியவாறு உள்ளே நகர்ந்துகொண்டிருந்தான் அந்தப்போராளி, 2ஆம் லெப்டினன்ட் குருதீஸ்வரன்.

எதிரி அடித்த ''தேடொளி விளக்குகள்'' அடிக்கடி தலைக்கு மேலால் ஏணிபாய்ச்சிச் சென்றன. அவர்கள் சண்டை தொடங்குவதற்காய் காத்திருந்தனர். எதிரியின் முதலாவது தடைகளை வெட்டி இரண்டாவது தடைக்கு 'டோப்பிட்டோ'க் குண்டைப் பொருத்தி விட்டு, குருதீஸ்வரன் மீண்டும் தன் அணியை நோக்கி ஊர்ந்து கொண்டிருந்தான்.

- அன்பு -

மெல்ல மெல்ல வீழ்ந்த மழைத் துளிகள் பெருமழையாகப் பொழியத் தொடங்கின. மார்கழி மாதத்து குளிர்காற்று நடுங்கவைத்தது. சண்டை தொடங்க இன்னும் சில நிமிடங்களே இருந்தன. கைகளில் இறுகப் பற்றிய துப்பாக்கியுடன் அந்த இறுதிக் கணத்திற்காய் போராளிகள் காத்திருந்தனர். அப்போது தான் அது நிகழ்ந்தது. மழையின் இரைச்சலை ஊடுருவி ''டமார்'' என ஒரு வெடியோசை. மின்னல் ஒளியில் குருதீஸ்வரன் கால்கள் துண்டிக்கப்பட்டுக் கிடந்தான், ஆனால் உயிருடன்.

அந்தச்சத்தம் எதிரியை உசார்ப்படுத்தியது. எதிரி அவர்களை நோக்கி தேடொளி விளக்கினைத் திருப்பினான். குருதீஸ்வரன் காயத்தின் வேதனையில் முனகினால் கூட அது சிலமீற்றர் தூரத்திலிருக்கும் எதிரிக்கு கேட்டுவிடும். எல்லோரும் தவிப்புடன் பார்த்திருக்க, அந்த மழை இரைச்சலினூடு குருதீஸ்வரன் முணுமுணுத்தது மெல்லக் கேட்டது.

''நான் சத்தம் போட மாட்டன். நீங்கள் தொடர்ந்து முன்னேறுங்கோ''

கண் முன்னாலேயே அவனதுகுருதி மழை நீரில் கரைகிறது. ''மழையில் ஏதோ காட்டு விலங்கு மிதிவெடியில் மாட்டி விட்டது'' என நினைத்தானோ என்னவோ? எதிரி சற்று நேரத்தில் அமைதியாகி விட்டான். தொடர்ந்தும் குருதிச் சேற்றில் கிடந்த தோழனை கடந்து அவர்கள் முன்னேறினர்.

''இரும்பையொத்த இலட்சிய உறுதியுடனும் எதையும் தாங்கும் இதயத்துடனும் சாவுக்கும் அஞ்சாத துணிவுடனும் எம் வீரர்கள் போராடினார்கள்'' என தலைவர் அவர்கள் எம் வீரர்களை எண்ணிப் பெருமையுறும் செயலை அவன் செய்திருந்தான்.

ஒரு போர்வீரன் தன் உயரிய வீரத்தை வெளிப்படுத்துவது என்பது வேறு. ஆனால் அவனும் ஒரு சாதாரண மனித உயிர் என்ற வகையில், தனது கால்கள்சிதைந்த பொழுதிலும் இயல்பான மனதின் தூண்டல்களை வெளிப்படுத்தாது, ஒலியெழுப்பாது வேதனைகளை அடக்கிக்கொள்வதென்பது வேறு. இது எப்படி ஒரு மனிதனுக்கு சாத்தியமாயிற்று? அதற்குத்தான் எத்தனை நெஞ்சுறுதி தேவைப்பட்டிருக்கும்.

ஆட்டிலறிகளைக் கைப்பற்றிக் கொண்ட அன்றைய எமது நடவடிக்கையின் மகத்தான வெற்றிக்கு அவனது நெஞ்சுறுதியே ஆதாரமாக அமைந்தது. O

# விரிகின்ற புலிகளின் போரரங்கும் எழுகின்ற புதிய இராணுவ யதார்த்தமும்

"ஜயசிக்குறுய்" கண்டி பிரதான வீதி பிடிப்பு நடவடிக்கை படைத்தரப்பால் கைவிடப்பட்டபின், வன்னிக் களத்தின் பாதை பிடிப்பு நடவடிக்கைக்கான போரரங்கை படைத்தரப்பு அகல விரித்தது. அதன் தந்திரோபாய நோக்கம் கருதி வன்னிக்களத்தில் பலமுனைகளில் படைகளை நகர்த்தி இராணுவத் தரப்பு விரிந்த போரரங்கிற்கு புலிகளை முகம்கொடுக்க வைத்தது.

விரிந்த போரரங்கை ஏற்படுத்துவதால் புலிகளின் பலத்தின் செறிவைச் சிதைத்து, தனது ஒன்று திரட்டிய பலப்பிரயோகத்தின் மூலம் பாதை பிடிப்புச் சமரில் வெற்றியீட்டுவதுடன், புலிகளின் தளப்பிரதேசத்தை படிப்படியாக சுருக்குவது என்ற தனது மூலோபாயத் தேவைக்கான நடவடிக்கைகளிலும் வெற்றியீட்டி விடலாம் என இராணுவ தலைமைப்பீடம் எண்ணியது.

இவ்வாறான முயற்சியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் வரிசையில் "ரிவிபல", "ரணகோச 1, 2, 3, 4, 4பகுதி-2"& "சுழல்காற்று" என நீண்டு செல்கிறது. ஆயினும் தரைவழிப்பாதை ஒன்றை திறத்தல் என்ற அடிப்படை இராணுவ இலக்கை இன்னும் வெற்றிகொள்ள முடியவில்லை. "வெற்றி நிச்சயம்" (ஜயசிக்குறுய்) நடவடிக்கையின் எதிர்பாராத தோல்வியும், புலிகளின் ஓயாத அலைகள்-2 ஏற்படுத்திய தாக்கமும் படைத்துருப்புகளின் போருக்கான மன நிலையை உடைத்தது. போர் மனநிலையை படைத்தரப்புகளிடம் வளர்த்தெடுப்பதற்கு இழப்புக்களின்றி வெற்றியீட்டப்பட்டு காட்டப்பட வேண்டும் என்பது இராணுவ தலைமைப் பீடத்திற்கு புதிய நெருக்கடியைவேறு கொடுத்தது.

இதற்காக விரிந்த போரரங்கை ஏற்படுத்தி புலிகளின் பலத்தையும், வளத்தையும் சிதைத்து, தனது ஒன்று திரட்டப்பட்ட செறிவான பலப்பிரயோகத்தின் மூலம் அதிக இழப்பின்றி வெற்றியை சாத்தியப்படுத்திக்கொள்ளலாம் என்ற இராணுவத்தின் எதிர்பார்ப்பிற்கு புலிகளிடமிருந்து பலத்த அடிகள், இறுதி நடவடிக்கைகளில் கிடைத்திருக்கின்றன. புலிகள் வன்னிச் சமர்க்களத்தில். இராணுவத்தின் விரிந்த போரரங்கில் வலுவான பாதுகாப்புச் சமரில் ஈடுபடக் கூடியவாறு தம்மை தயார்ப்படுத்தி களத்தில் எதிரிக்காக காத்திருக்கின்றனர். இதனை இராணுவத் தரப்பும் உணர்ந்திருக்கக்கூடும்.

நடவடிக்கையை முன்னெடுப்பதற்காக மேலதிக படை ஆளணிவலுவை இராணுவத் தரப்பு எதிர்பார்க்கிறது. புலிகளின் வலிந்த தாக்குதல் மீதான அச்சுறுத்தலால் வன்னிச்சமர்க்களத்தின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்த வேண்டிய கட்டாயம் இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ளதே தவிர படையை ஒன்று திரட்டுவதற்கான வாய்ப்பு அற்றுப் போயுள்ளது: இதுவரையான வன்னிச் சமர்க்களத்தின் இழப்புகளுக்கு பதிலீடாக ஈடுபடுத்தப்பட்ட படைகள் கூட இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் இருந்து ஒன்று திரட்டப்பட்டு வரவழைக்கப்பட்டவையே.

புதிதாக ஆட்திரட்டல் நடவடிக்கைகள் படுதோல்வியடைந்ததால் இருக்கின்ற படையையே ஒன்று திரட்ட வேண்டிய தேவை படைத்தரப்பிற்கு இருந்து வந்தது: இப்பொழுதும் இருக்கின்றது. இராணுவத்தளபதி சிறிலால் வீரசூரியா பத்திரிகையாளர் மாநாட்டின் போது 20,000 மேலதிக படையினர் வன்னிச் சமர்க்கள நடவடிக்கைகளுக்குத் தேவைப்படுவதாகத் தெரிவித்தார். பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கூட மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இவ்வாறான ஆளணித்தேவையின் நெருக்கடியில் இராணுவத் தரப்பினருக்கு அரசாங்கம் ஆட்சிமன்றத்திற்கான தேர்தலை எதிர்கொள்ள வேண்டியுள்ளதால் அரசியல் தேவை இராணுவ நடவடிக்கைக்காக அதன் தலைமைப் பீடத்தை நிர்ப்பந்திக்கிறது. இராணுவத் தரப்பு வெற்றிக்கான சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து நடவடிக்கைக்குத் திட்டமிட புலிகள் தமது போரரங்கை இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்திற்குள் நீட்டி விரித்துள்ளனர்.

"எதிரியை அறிவதில்தான் போரின் வெற்றி தங்கியுள்ளது" என்பது போரின் அடிப்படைச் சூத்திரம். தலைவர் பிரபாகரன் எதிரி விரித்த போரரங்கை எதிர்கொண்டு, அதையே எதிரிக்கு பொறியாக்கும் வகையில் மேலும் ஒருபடி உயர்ந்து, ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் எதிரியின் உட்புற பாதுகாப்பு நிலைகள் வரை புலிகளின் போரரங்கை நீட்டி விரித்துள்ளார். மாற்றுத் தந்திரோபாய அணுகு முறையில் புதிய பரிமாணத்தில் விரிக்கப்பட்ட புலிகளின் போரரங்கு இராணுவத்தரப்பை மட்டுமல்லாது அதை நம்பியுள்ள அரசியல் தரப்பையும் தலைவர் பிரபாகரனின் அடுத்தகட்ட படைநகர்வு பற்றி அஞ்சவைத்துள்ளது.

01/07/1999 தொடக்கம் 31/08/1999 வரையான அறுபது நாட்களில் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் புலிகள் விரித்த போரரங்கில் 121 படையினர் கொல்லப்பட்டதுடன் 120 படையினர் காயமடைந்தும் உள்ளனர். இத்தொகை புலிகளின் தாக்குதல் பற்றி படைத்தரப்பால் ஒப்புக்கொண்டு வெளியிட்ட அறிக்கையில் இருந்து பெறப்பட்டதே. எனவே இழப்பு இதைவிட அதிகமானதாக இருக்கலாம். சராசரியாக ஒரு நாளைக்கு நான்கு படையினருக்கு அதிகமாய் இறந்தோ, காயமடைந்தோ இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் இருந்து அகற்றப்பட்டுள்ளனர். புலிகளின் சிறப்புத் தாக்குதலணிகள் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் இத்தகைய வெற்றிகளைச் சாதித்து வருகின்றன.

எதிரியின் ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் நடைபெற்று வரும் சிறப்பு அணிகளின் தாக்குதல்கள் படைத்தரப்பை நெருக்கடிக்குள்ளாக்கி வருகின்றன: இத்தாக்குதலை எதிர்கொள்ளவோ, தடுத்து நிறுத்தவோ பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு மேலதிக படைகளை ஈடுபடுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இராணுவ தலைமைப் பீடத்திற்கு எழுந்துள்ளது.

ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் புலிகளின் வெற்றிகரமான தொடர் தாக்குதல்கள், அம் மக்கள் எதிரி இராணுவத்தின் மீது கொண்டுள்ள எதிர்ப்புணர்வையும், இராணுவத்தை எதிர்ப்பதற்கான அவர்களின் தயார் நிலையையும்கூட வெளிப்படுத்தி நிற்கின்றது. ஏனெனில் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் இராணுவம் மேற்கொண்டுள்ள மிகையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மத்தியில் போராளிகள் நடமாடுவது என்பது அம்மக்கள் போராட்டத்தின் மீது கொண்டுள்ள பற்றுணர்வையே



**பகைமனது கிலிகொள்ள**
**விரிகிறது போரரங்கு!**
**விரைகிறது புலிகள்சேனை!!**

வெளிப்படுத்தும். போராளிகள் வெற்றிகரமான தொடர்ச்சியான தாககுதலில் ஈடுபடுவதென்பது, அப்போராளிகள் சார்ந்துள்ள மக்கள், எதிரியை எதிர்பபதற்கான தயார் நிலையை அடைந்துள்ளதையே வெளிக்காட்டும். இதனால் அப்பகுதியில் செயற்படும் இராணுவத்தினரின் மனோதிடம் பாதிக்கப்படுவதுங் கூட இயல்பானதே.

இத்தகைய சூழலில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் இராணுவத் தரப்பிற்கு புதிய சவால்கள எழுந்துள்ளன. அதே நேரம் இராணுவ இழப்பீடுகளுக்கு புதிய நிரப்பீட்டைக் கொடுக்க முடியாத ஆட்திரட்டல் தோல்வி மேலும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது. தேர்தல்கள் நெருங்கும் வேளையில் இத்தகைய "அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில்" இராணுவத்தின் இயலாமை வெளிப்படுவது அரசாங்கத்திற்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

இது இவ்வாறிருக்க 12ம் திகதி கொக்கிளாய் கடற்பரப்பில் கடற்புலிகள் மேற்கொண்ட சிறிலங்கா கடற்படை மீதான தாக்குதலில் "டோறா" அதிவேக பீரங்கிப் படகு ஒன்று சேதமடைந்தது. மீண்டும் 16ம் திகதி அதிகாலை 3.15 மணிக்கு புல்மோட்டைக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படை ரோந்து அணி மீது கடற்புலிகள் தாக்குதல் நடத்தினர். கடுமையான இச்சண்டையில் ரோந்தை வழிமறித்துத்தாக்கிய கடற்புலிகள் எதிரியின் 'டோறா' அதிவேக பீரங்கிப் படகொன்றை மூழ்கடித்தனர். இதுபோன்ற இரண்டு பீரங்கிப் படகுகள் சேதமாக்கப்பட்டன. இச்சண்டையில் பத்திற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். இந்த வெற்றிகரத் தாக்குதலில் கடற்கரும்புலிகளான லெப். கேணல் நீதியப்பன், மேஜர் எழில்வேந்தன் ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

கடற்படை பின்னர் மீனவர் படகை மூழ்கடித்து புலிகளின் படகுகளை தாக்கி அழித்ததாக வழமைபோல் பிரச்சாரப்படுத்தியது. கடற்படையின் இந் நடவடிக்கையில் இரு மீனவர் கொல்லப்பட்டனர்.

**கு. கவியழகன்**

இவ்வாறு வன்னிச் சமர்க்களத்திற்கு அப்பால் புலிகள் விரிக்கும் போரரங்கு, இராணுவம் புலிகள் பற்றிகொண்டிருந்த மதிப்பீட்டின் அடிப்படையில் வகுத்திருந்த போர்த்திட்டங்களை மீளபரிசீலனைக்குட்படுத்த வேண்டிய சிக்கல் உருவாகியுள்ளது.

யுத்தத்தில் போருக்கான இழப்பீட்டை (Lost of Battle)

(09ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா அரசினால்

# வன்னிப் பிரதேசத்திற்கான தரைவழிப் போக்குவரத்துப் பாதை தடைசெய்யப்பட்டதும், பின்னர் திறக்கப்படவேண்டியிருந்ததும் ஏன்?

"குடா நாட்டிற்கான தரைவழிப் போக்குவரத்துப் பாதை திறப்பு'' என்ற பெயரில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் சிங்களப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட வன்னி மக்கள் மீதான பாரிய படையெடுப்புகள் பாதி வழியில் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஜயசிக்குறுய், ரணகோஷ என்ற இரு வேறு இராணுவ நடவடிக்கைகள் மூலமான படையெடுப்புக்களை விடுதலைப் புலிகளின் தீரமிகு எதிர்ப்பு நடவடிக்கைகளும் தாக்குதல்களும் முறியடித்த நிலையில் வன்னிக் காடுகளெங்கும் சிங்களப் படைகளின் பெரும் பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் உறுதியான தற்காப்பு போராற்றலுடன் கூடிய மரபுமுறைப் போரிடலின் உச்ச வளர்ச்சியும், வன்னி வாழ் மக்களின் உறுதி தளராத தாயகப் பற்றும் தலைமைப்பற்றுமானது எதிரியின் எந்தவொரு அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளக் கூடிய பக்குவத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. இதனை சிங்களமே ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றது எனக் கூறுவதில் மிகை இல்லை.

மேலும் சிங்கள இராணுவம் தாம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகக் கூறும் பகுதிகளிலும், படைகளிற்கு மிக அண்மித்த இடப்பரப்புகளிலும் விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. இந்நிகழ்வுகள், சிங்களப் படைத்தரப்பானது தாம் அகலக்கால் பதித்திருப்பதன் விளைவினை அனுபவிக்கத் தொடங்கியிருப்பதனைச் சுட்டிக்காட்டி நிற்கின்றது. அதுமட்டுமன்றி தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் உறுதியானதும் நீண்டகால நோக்குடையதுமான இராணுவ தந்திரோபாயங்களை மேற்கூறப்பட்ட நிகழ்வுகள் உறுதிப்படுத்துவனவாகவும் இருக்கின்றன.

''சமாதானத்திற்கான போர்'' என்று இன அழிப்பிற்கான ஆக்கிரமிப்புப் போரிற்கு போலியான காரணப் பெயரிட்டு மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து இராணுவ நடவடிக்கைகளும் அதனது இலக்குகள் நிறைவேறாமலேயே இடைநிறுத்தப்பட்ட நிலையில்; சந்திரிகா அரசும் அதன் படைத்தலைமையும் வேறெந்த வழியிலாவது தமது இலக்குகளை அடைய முயற்சிக்க வேண்டியிருந்தது.

''சமாதானத்திற்கான போர்'' என்ற ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் தப்பூர் ஆக்கிரமிப்புக் குறியீட்டுப் பெயர் ஆனது, ஒரு பக்கம் போர் நடவடிக்கையினை நியாயப்படுத்தவும் இன்னொரு புறம் பேரினவாதத் திட்டங்களை நிறைவேற்றுவனவாகவும் அமையப்பெற்றதொரு வாக்கியமாகும்: ஆனால் குறுகிய காலத்தில் இவை சாத்தியப்பட்டன போன்று தோன்றினாலும் நீண்டகாலப் போக்கில் இரண்டு விடயங்களையும் நிறைவேற்றாமல் திணறிக் கொண்டிருக்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இதற்கு உதாரணமாக குடாநாட்டை ஆக்கிரமித்து இன்னமும் அங்கு அமைதியை ஏற்படுத்த முடியாமல் மூன்று வருடங்களிற்கு மேலாக படைகள் தமக்கான பாதுகாப்புப் போரைச் செய்த வண்ணம் உள்ளதைக் குறிப்பிடலாம்.

இந்தச் செயற்பாடானது போர் மூலமோ அல்லது விடுதலைப் புலிகளின் பங்குபற்றல் இல்லாத எந்தவொரு அணுகுமுறை மூலமோ ஜனாதிபதி சந்திரிகா கூறுவது போன்று சமாதானத்தையோ, அபிவிருத்தியினையோ ஏற்படுத்த முடியாது என்பதனைக் காட்டி நிற்கின்றது. இதனை தற்போது உலகம் உணரத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் தான் விடுதலைப்புலிகள் தமிழ் மக்களிற்காக போராடவில்லை, அவர்கள் தமிழ் மக்கள் மீது அக்கறை இல்லாதவர்கள் என்ற தோற்றப்பாட்டை காண்பிக்க திட்டமிட்டு செயற்பட்டது. அதில் ஒரு வகையான செயற்பாடே வன்னிப் போக்குவரத்துக்கான தரைவழிப்பாதை வழியே இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றை மூடப்பெற்று, வன்னி மக்களின் உணவு, மருந்து மற்றும் அத்தியாவசிய போக்குவரத்து வசதிகளை துண்டித்ததாகும். மேலும் படைத்தரப்பானது, விடுதலைப்புலிகளால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனக்கருதும் பல்வேறு நிபந்தனைகளை பாதை திறப்பிற்கு விதிப்பதன் ஊடாக பாதை திறப்பிற்கு தடையாக இருப்பது விடுதலைப் புலிகள் தான் என சர்வதேசத்திற்கும் மற்றும் உள்ளூரிலும் அவப்பெயரை ஏற்படுத்தவும் திட்டமிட்டு இருந்து.


இது ஒரு புறம் இருக்க பாதை திறப்பு மூலமாக இழுத்தடிப்பு நடவடிக்கை, வன்னியில் விடுதலைப்புலிகளுடன் ஒன்றிப்போய் இருக்கும் தமிழ் மக்களின் உறுதி மிக்க ஐக்கியத்தை உடைப்பதற்கும், அவர்களின் தாயகப் பற்றையும், தலைமைப் பற்றையும் சிதைப்பதற்கும் திட்டமிட்டு செயற்பட்டது. அதாவது ஏற்கனவே போர்ச் சுமைகளாலும் அதனால் எழுந்த பொருளாதாரச் சுமைகளாலும் மக்களின் வாழ்வு நிலை நலிந்து போய் இருந்தது. மேலும் அவர்களின் மீதமாயிருந்த வாழ்வாதாரங்களை அழிப்பதன் ஊடாக மக்களின் தன் நம்பிக்கையினைத் தகர்த்து, தமிழ் மக்களிற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே இடைவெளியை ஏற்படுத்தவும் முனைந்தது.

ஆனால் இருவேறுபட்ட சிங்கள அரசின் தந்திரோபாயங்களும் விடுதலைப்புலிகளின் நேர்மையான மனிதாபிமான செயற்பாடுகளினாலும் முறியடிக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய இரண்டு வகையான தந்திரோபாயங்களுடன் சிங்களப் படைத்தலைமையானது தனது இராணுவ நகர்வுகள் சிலவற்றையும் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தது. அதாவது பாரிய படையெடுப்புச் சமர்கள் மூலம் பெருமளவு விலையினைக் கொடுத்து ஆமை வேக நகர்வின் ஊடாக ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளைத் தக்கவைப்பதற்கும்; மேற்கொண்டு விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு வேலிகளை உடைக்க முடியாது திணறிக் கொண்டிருக்கும் படையினரை இலகுவாக நகர்த்துவதற்கும்; தமிழ் மக்களைப் பயன்படுத்திச் செயற்பட படைத்தரப்பு திட்டமிட்டு இருந்தது. எனவே தான் இவை அனைத்தினையும் நிறைவேற்றும் பொருட்டு வன்னிக்கான கட்டளை அதிகாரியான மேஜர். ஜெனரல். எல்.பி. பல்லேகல' வினை வன்னிக்கான இராணுவ சிவில் நடவடிக்கைகளிற்குப் பொறுப்பாக அரசு நியமித்தது.

### திட்டமிட்டபடி போக்குவரத்துப் பாதைகள் மூடப்பட்டன

வன்னி மற்றும் குடாநாட்டிற்கான தரைவழிப் பாதைகளை மூடி வைத்திருப்பது யார் என்பதனையும் பாதை திறப்பதற்கு தடையாக இருப்பது யார் என்பதையும் சர்வதேசமும், மனிதாபிமானமுள்ள அனைத்துத் தரப்பினரும் புரிந்து கொள்வது சிறந்தது. தமிழர் தாயகப் பகுதிகளில் சிங்களப் பாதுகாப்பு தமக்குத் தேவை இல்லை என்பதை இற்றைவரை தமிழ் மக்கள் காட்டிய வண்ணமே உள்ளனர். இந்த நிலையில் வவுனியாவில் இருந்து குடாநாடு வரையான கண்டி வீதி (ஏ-9) யில் பல்வேறு இடங்களிலும் எஸ்.எல்.ஏ. படைகள் முகாமிட்டு, அவற்றைப் பொதுமக்கள் பாவனைக்கு தடைவிதித்தும் உள்ளனர்; உதாரணமாக பரந்தனில் இருந்து இயக்கச்சி வரை பிரதான வீதியில் எஸ்.எல்.ஏ.யினரே தடைபோட்டுள்ளனர்: அவ்வாறு மாங்குளத்தில் இருந்து வவுனியா

### பாதை திறப்பிற்காக சிறிலங்கா அரசினால் முன்பு விதிக்கப்பட்ட நிபந்தனை




வரை படையினரே போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளனர். என்பதைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இது இவ்வாறு இருக்க சிங்கள அரசும் படைத்தரப்பும் பாதைகளைத் திறப்பதும் பின்னர் இராணுவ நோக்கம் அல்லது அடக்கு முறையின் கருவியாக அதனை மாற்றுவதும் தமிழீழப் போராட்ட வரலாற்றில் தமிழ் மக்களைப் பொறுத்தவரை

**- கே. பி. றெஜி -**

புதியவை அல்ல. அது P.A அரசாக இருந்தாலும் சரி, U.N.P அரசாக இருந்தாலும் சரி, இதனையே வழமையாகச் செய்து வருகின்றது. உதாரணமாக, குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலப்பகுதியில் பலாலிக்கு மேறக்க சேந்தாங்குளம் பாதையானது தற்போதைய மாங்குளம் பாதை திறப்புப் போலவே நடைபெற்று பின்பு அப்பாதை வழியாக இராணுவ நடவடிக்கை மேற்கொண்டு

# -நாற்பது நாட்களாக நடந்தது என்ன?

அவை மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது. அன்றில் இருந்து இன்று வரை போக்குவரத்துப் பாதை திறத்தல்-மூடுதல் நாடகம் இன்னமும் ஓயவில்லை. எனவே இதன் தொடர்ச்சியாக வன்னி மக்களிற்கான பாதையினை மூடுவதற்கு அரசு திட்டமிட்டு, அதன் வழியாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. இந்த செயற்பாடு இராணுவத்தைப் பொறுத்த வரை அவர்களிற்கு ஓர் நகர்வாகவே அமைந்தது. காரணம் மக்கள் போக்குவரத்துச் செய்யும் பாதைகளில் பாரிய போர்த் தயார்ப்படுத்தல்களை விடுதலைப் புலிகள் செய்து வருவதில்லை. இவ்வாறுதான் இறுதியாக உயிலங்குளம் பாதை நிலவரமும், இருக்க, அப் பாதையினை மனிதாபிமானம் அற்ற முறையில், திட்டமிட்ட இராணுவ நடவடிக்கை மூலம் சிங்கள அரசு கடந்த 25.06.99 இல் மூடியது.

## பாதை திறப்பு தொடர்பாக சிங்களப் படைத்தரப்பு கூறியவை

பாதை மூடப்பட்டதற்கு எந்தவித காரணங்களையும் கூறாது ''இராணுவ நடவடிக்கை என இலகுவாக பாரியதொரு அடிப்படை மனித உரிமை மீறலினைச் செய்துவிட்டு சிங்கள அரசு பேசாமல் இருந்தது. ஆனால் பாதை திறப்பு முயற்சிக்கு ஏற்றுக் கொள்ளப்பட முடியாத நிபந்தனைகளை விதித்து விட்டு அதனை மனிதாபிமான நடவடிக்கை என உலகிற்குப் பிரச்சாரப்படுத்தியது. இதன்படி பாதை மூடப்பெற்று (25.06.99) மூன்றாவது நாளான 29.06.99 சிங்கள அரசினால் ஐ.சி.ஆர்.சி. ஊடாக அனுப்பப்பட்ட கடிதத்தில் மூன்று வழிகளைக் குறிப்பிட்டு ஏதாவது ஒன்றைத் திறக்க சம்மதம் கேட்டிருந்தது. விடுதலைப் புலிகளும் படைத்தரப்பின் இராணுவ சூழ்ச்சிகளைக் கருத்தில் கொண்டும்கூட மக்களிற்கான போக்குவரத்தின் அத்தியாவசியத்தை உணர்ந்து வவுனியா - மாங்குளம் (ஏ-9) வீதியினைத் திறக்க சம்மதம் தெரிவித்து 02.07.99 பதில் கடிதமும் அனுப்பப்பட்டது. ஏனைய இரண்டு பாதைகளான பூவரசங்குளம்-மூன்றுமுறிப்பு பாதையும் மற்றும் வவுனியா-ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு பாதையும் போக்குவரத்திற்கு அதிக சிரமத்தை ஏற்படுத்தும் என்பதனாலும் மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டதாலும் தவிர்க்கப்பட்டன. மேற்கூறப்பட்ட மூன்று பாதைகளில் எந்தவொரு பாதையினையும் புலிகள் திறக்கச் சம்மதிக்க மாட்டார்கள் என்ற திட்டத்தில் இருந்த படைத் தரப்பிற்கு மாங்குளம் வீதி திறப்பதற்கு சம்மதம் தெரிவித்தது அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். இதன் பின்னர் மூன்று நாட்களின் பின்பு மாங்குளம் பாதை திறப்பது தொடர்பாக சிங்களப் படைத்தரப்பு ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளை விதித்தது. அதாவது பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்ற பெயரில் 05 கிலோ மீற்றர் நீளமும் 01 கிலோ மீற்றர் அகலமும் கொண்டதுமான பாதுகாப்பு வலயம் ஏற்படுத்தப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டது. அதாவது 27.07.99 திகதிய சிங்களப் படைத் தரப்பின் கடிதத்திலேயே இவை கேட்கப்பட்டிருந்தன. இதனபடி விடுதலைப் புலிகள் தமது முதலாவது முன்னரங்கு காப்பரண் (F.D.L) இல் இருந்து-140.02 M.P இல் இருந்து-பின்னோக்கி 05 கிலோ மீற்றர் நீளமானதும் 01 கிலோ மீற்றர் அகலமானதுமான விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இடப்பரப்பை பொது மக்கள் பாதுகாபபுப் பிரதேசமாக (Civilian Security Zone) இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. (படம்-01) ஆனால் படைத்தரப்பின் கட்டுப்பாட்டில் உள்ள இடப்பரப்பை பாதுகாப்பு வலயத்திற்கு விட்டுக் கொடுப்பது பற்றி தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே தான் இதில் உள்ள இராணுவ சூழ்ச்சிப் பொறிகளை முன்னுணர்ந்து விடுதலைப் புலிகள 25.07.99 இல் நிராகரிப்புக் கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்தனர்.

25 . 07 . 99 இல் ஐ.சி.ஆர்.சி. கொழும்பு வதிவிடப் பிரதிநிதி திரு.மக்ஸ் காடென் (MR. MAX HARDON) அவர்களிற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்களால் அனுப்பப்பட்ட கடிதத்தில் பாதை திறப்பு தொடர்பாக சிங்கள அரச தரப்பு பொது மக்கள் நலனைக் கருத்தில் கொள்ளாது இராணுவ நலன்களை கருத்தில் கொள்வதாகவும் போரில் மக்களிற்கான உணவு, மருந்துப்பொருட்களை ஆயுதமாக சிங்கள அரசு பயன்படுத்துகின்றது எனவும் இதற்கு உதாரணமாக அம்புலன்ஸ் போக்குவரத்து இன்மையால் அதாவது சிங்கள அரசின் மனிதாபிமானமற்ற செயலால் நோயாளர் மேலதிக சிகிச்சை பெற முடியாது இறந்து போனதையும் சுட்டிக் காட்டியதோடு அரசு திட்டமிட்டு இப்பாதை திறப்பு விவகாரத்தை இழுத்தடிப்பதற்காகவே பல்வேறு நிபந்தனைகளை விதிக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் பாதை திறப்பு தொடர்பாக விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு பற்றி குறிப்பிடுகையில் சிங்கள அரசின் இராணுவ நலனை மட்டும் கருத்தில் கொண்ட நிபந்தனையினை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் இரு பகுதியினரது FDL பகுதியினை சூனியப் பிரதேசமாக ஏற்றுக்கொண்டு பாதை திறக்கச் சம்மதிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும்

பொது மக்கள் நிலையினைக் கருத்தில் கொண்டு உயிலங்குளம் - பள்ளமடு பாதையினை மீண்டும் திறப்பதற்குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டதோடு மட்டுமல்லாது நோயாளர்களை விரைவாகவும் தனியாகவும் கொண்டு செல்வதற்கு ஐ. சி. ஆர். சி. யினால் கேட்கப்பட்ட கடல்வழிப் பாதைக்கும் ஒப்புக்கொள்ளப்பட்டு விடுதலைப்புலிகளால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது.

ஆனால் படைத்தரப்பு மேற்குறிப்பிட்ட கடிதத்தில் குறிப்பிட்ட அம்சங்கள் எதையும் கருத்தில் எடுக்காது விடுதலைப்புலிகள் மாங்குளம் பாதையினை திறப்பதற்கு மறுத்து விட்டதாகவும் மக்கள நலனில் விடுதலைப்புலிகள் அக்கறை இல்லை எனவும் பாரியளவில் பிரச்சாரத்தில் ஈடுபட்டது. இதன் மூலம் மக்களும் மனித உரிமையில் அக்கறை உள்ளோரும் அறிய வேண்டியது என்னவெனில், சிங்கள அரசு விடுதலைப்புலிகளை எவ்வாறு அரசியல் இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தலாம் என்பதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்தியுள்ளது என்பதுடன் அவலத்தைப் புரிந்து கொள்ளும் மனித நிலையில் அவர்கள் இல்லை என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது. இது இவ்வாறு இருக்க ஐ. சி. ஆர். சி. கொழும்பு பிரதிநிதியால் விடுதலைப் புலிகளின் மனிதாபிமான நடவடிக்கையினை வரவேற்று 28 . 07 . 99 அன்று நோயாளர்களை வவுனியாவிற்கு கொண்டு செல்வதற்கு பள்ளிமுனை படகுத்துறை கடல்வழிப் பாதையினைத் திறந்து மீன்பிடிப் படகுமூலம் நோயாளர்களைக் கொண்டு செல்ல ஆலோசனை கேட்டுக் கடிதம் அனுப்பப்பட்டது. இதற்கு விடுதலைப் புலிகளால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால் படைத்தரப்பு பாதை திறப்பு தொடர்பாக தொடர்ந்து மௌனம் சாதித்து வந்தது ஒரு புறம் இருக்க, தமது பிரச்சார ஊடகங்களின் வாய்களை மட்டும் நன்கு திறந்து வைத்திருந்தது.

## மக்களை கேடயமாகப் பயன்படுத்தி இராணுவ நலனை அடைய முற்பட்டமை


மேற்குறிப்பிட்ட கடிதப் பரிமாற்றங்கள் நடைபெற்ற வண்ணம் இருக்க, சிங்கள அரச தரப்பின் பிரச்சார ஊடகங்கள் புலிகள் எந்தவொரு பாதை திறப்பிற்கும் சம்மதம் தெரிவிக்காமல் மக்களைப் பட்டினி போடுகின்றார்கள் என்று ஓயாது அலறியது மட்டுமல்ல, படைத்தரப்பின் மனிதாபிமான முயற்சி தொடர்கின்றது என்றும் மேலும் ஐந்து பாதைகள் படையினர் திறப்பதற்கு தயாராக இருப்பதாகவும் கூறியது. அதாவது:

01)வவுனியா-மூன்றுமுறிப்பு-துணுக்காய் வீதி
02)வவுனியா - மாங்குளம் - துணுக்காய் வீதி
03)வவுனியா - மாங்குளம் - கண்டி வீதி
04)வவுனியா-ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு வீதி
05)வவுனியா-ஒட்டுசுட்டான்-முல்லைத்தீவுவீதி.

ஆனால் இது தொடர்பான எழுத்து மூலமான செய்தி 02.08.99 இலேயே கிடைக்கப் பெற்றது. அதற்கு முன்பு 28.07.99 இல் சிங்கள அரச வானொலியானது படைத்தரப்பு புலிகளின் காப்பரண்களை தகர்த்து மக்களைப் பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றப் போவதாக வன்னிக்கான கட்டளை அதிகாரி பல்லேகல கூறியதாக ஒலிபரப்பியது. இந்தளவு, மக்களில் அக்கறை கொண்ட அரசும் படையும் அதிகளவு ஆபத்தைக் கொண்ட மேற்கூறப்பட்ட நடவடிக்கையினை விட 01கிலோ மீற்றர் தூரத்தினை சூனியப் பிரதேசமாக ஏற்று (No Man's Land) திறந்திருகலாம் அல்லவா? ஆனால் அதனைச் செய்யாது வானொலி ஊடாகக் கதை பரப்பிக் கொண்டிருந்தது. இது இவ்வாறு இருக்க, 28.07.99 காலை 09.41 என திகதியிடப்பட்ட எல்.பி. பல்லேகல'வின் தொலைநகல் செய்தி ஒன்றினை மல்லாவி வதிவிடப் பிரதிநிதியால் பிற்பகல் 12.19 மணி அளவில் விடுதலைப் புலிகளிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதனை அரச வானொலியும் அதே நேரம் ஒலிபரப்பியது.

அந்த செய்தியில் இரண்டு மாத காலமாக வவுனியாவில் வன்னிக்குச் செல்வதற்காக காத்திருக்கும் மக்கள் 2300 பேரும் தமது சொந்தப் பொறுப்பில் மூன்றுமுறிப்புப் பாதையூடாக 28.07.99 பகல் எஸ்.எல்.ஏ. யினரின் முன்னரங்க காப்பரண்களைக் கடந்து துணுக்காய் செல்லவுள்ளனர் என குறிப்பிடப்பட்டு இருந்தது. அதே வீச்சில் அதனை நடைமுறைப்படுத்த முயற்சியும் மேற்கொண்டது. அதாவது விடுதலைப் புலிகளால் இந்த செய்திக்கான ஆலோசனை அல்லது பதிலைத் தெரிவிக்க முன்பே சிங்களப் படை இதனை நடைமுறைப்படுத்த முயற்சித்தது.

மாங்குளம் ஊடான யாழ்-கண்டி வீதியில் [illegible] போக்குவரத்து ஒழுங்குமுறை




சிங்களப் படையினது மனிதாபிமானமற்ற, மனித ஆபத்து நிறைந்த இந்த செயற்பாட்டினது நோக்கம் என்னவெனில்; வவுனியாவில் இருந்து வன்னிக்குச் செல்வதற்கு 2300 மக்களும் பாதையினைத் திறக்குமாறு கூறி போராட்டம் செய்தனர். இதனை வாய்ப்பாகப் பயன்படுத்த எஸ்.எல்.ஏ. யினர் திட்டமிட்டு அவர்களின் கோரிக்கைக்குப் பணிவதாக நடித்து, படையினரால் பலமுறை முயற்சி செய்தும் உடைக்க முடியாத

( 02ஆம் பக்கம் பார்க்க )

# மண்பற்றும் மனிதப்பற்றும் உருவாக்கிய மகத்தான வீரன்

"தம்பி நீ சைக்கில்லை போய் கோயிலில் நில் நாங்கள் நடந்துவாறம்'' அம்மா அன்பாய் கேட்டுக்கொண்டாள்.

''இல்லையம்மா நானும் உங்களோட நடந்துவாறன். அப்பதான் நிறைய ஊராக்களைக்கண்டு கதைக்கலாம்.'

அம்மா பாவம், அவளிற்கு அப்போது எதுவும் புரியவில்லை.

பிள்ளை வழமையா விடுமுறையில் வந்து நிக்கிறதைப் போலதான் இந்த முறையும் வந்து நிக்கிறான் என நினைத்தாள்.

ஆனால் தன் மகனின் நெஞ்சுக்குள்ளேயே குமுறிக் கொண்டிருக்கும் இலட்சிய நெருப்பை அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை.

இரவு நேர கோயில் திருவிழா என்பதால் அவனிற்கு தெரிந்த அதிகமானவர்கள் அங்கே வந்திருந்தார்கள்.

எல்லோரது கைகளையும் பற்றி சந்தோசமாகச் சிரித்துக் கதைத்தான். விடைபெற்றுச் செல்லுகின்ற ஒவ்வொருவருக்கும் அன்பாய் விடை கொடுத்தான்.

மகனின் எளிமையான மனதினையும் எல்லோரிலும் பாசம் வைக்கும் தன்மையினையும் கண்டு அம்மா மனதிற்குள் பெருமைப்பட்டுக் கொண்டாள்.

இந்த மகன் தான் அன்றைய இரவு எட்டு மணி என்றும் பாராது வீட்டை வந்த உடனேயே அம்மாவுக்கு அன்பாய்த் தொல்லை கொடுத்தவன்.

''நான் காலமை போயிடுவன். எனக்கு ஏராளமான வேலையிருக்கு. எனக்கிப்ப உன்ர கையால சமைச்சு சாப்பாடு தரவேணும்'' என்றான்.

மகன் அம்மாவோடு இப்படிச் செல்லமா அடம்பிடிப்பது வழமை. அதனால் அம்மா எதையும் யோசிக்கவில்லை.

''வேலையா, என்டா எங்க தூரப்பயணமோ'' தயங்கித் தயங்கி அம்மா கேட்டாள்.

மகன் சிரித்தான். தாயின் கைகளை அன்பாய் பிடித்து அணைத்தான்.

''திருகோணமலைக்கு போறன். எப்படியும் வந்திடுவேன். வராட்டி பொடியளிட்டை சொல்லிவிடுவன்'' மீண்டும் மகன் சிரித்தான். அம்மா கவனிக்கவில்லை.

அம்மா இரவோடு இரவாக கோழிக்கறி காய்ச்சி தன்ர கையால மகனிற்கு சாப்பாடு கொடுத்தாள். அவன் சாப்பிடவில்லை.

சாப்பாட்டைப் பார்த்து மௌனமாயிருந்தான்.

மகன் சாப்பிடவில்லை என்றதும் தாய் துடித்துப் போனாள்.

''அம்மா தனியச்சாப்பிட ஒரு மாதிரிக் கிடக்கு. ஊர்ப் பொடியன்கள் கொஞ்சப் பேரைக் கூட்டிவாம்மா.''



**கடற்கரும்புலி: மேஜர் தணிகைமாறன்**

பெயர்:- யாக்கோப்பு அன்ரன் பெனடிற்
முகவரி:- வெற்றிலைக்கேணி
பிறப்பு; 28-06 1970
வீரச்சாவு: 19-04-1995

இவரது சகோதரர்
**வீரவேங்கை தணிகைமாறன்**

பெயர்:-யாக்கோப்பு கிறிஸ்ரி (குமார்)
வீரச்சாவு:-22/11/1995
சம்பவம்:- சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை.

''அம்மா இந்தாங்கோ இதைச் சாப்பிடுங்கோ'' தன்கையினால் பிசைந்து அளைந்த சாப்பாட்டில் பாதியை அம்மாவிடம் நீட்டினான்.



**போராளியின் குருதிச்சுவடுகள்**

''10 மணிக்கு வாகனத்தில வந்து கூட்டிக் கொண்டு போறம் என்டெல்லே சொல்லிப் போட்டு போனவங்கள். ஏன்ரா இப்பவே.'' அம்மா மெதுவான குரலில் இழுத்தாள்.

''ஊரில எல்லோருக்கும் சொல்லிப்போட்டு போகவேணும். இப்பவே போனாத்தான் சொல்லிப்போட்டுப் போகலாம்.''

சொல்லிவிட்டு மகன் சிரித்தான். வீட்டுக்காரரைப்போல ஊரவர் ஒவ்வொருவரையும் நேசிப்பவன்தான் தனது மகன் என்று அம்மாவிற்குத் தெரியும். அதற்மேல் எதுவும் பேசவில்லை.

மகன் போய்விட்டான்; அம்மா பாவம். எதுவும் புரியவில்லை. காத்திருந்தாள்.

தன் மகன் தன்னிடம் இறுதியாகத்தான் விடைபெற்றுப் போகிறான் என்று அவளிற்குத் தெரியாது.

இன்னும் ஒரு பகலும் ஒரு இரவும் கழிந்தால் தன் மகன் இலக்கினை நோக்கிச் சென்றுவிடுவான் என்று அறிந்தால் பெற்றவள் தாங்கிக் கொள்வாளா?

ஆனால் அவனிற்கு தெரியும்.

இன்னும் ஒரு இரவினதும் பகலினதும் இடைவெளிக்குள்தான் கதைப்பது சிரிப்பது கலகலப்பது எல்லாம் என்று.

அதற்கிடையில் தான் நேசித்த ஒவ்வொருவரிற்கும் இறுதி விடை கொடுத்துக்கொண்டிருந்தான்.

0 0 0

அவன் ஊரவர்களை, தனது உறவினரை நேசித்த நேசிப்பிற்குள் எத்தனை புனிதமான உணர்வுகள் பொதிந்திருந்தன. அந்த ஊரவர்களின் துயரம் கண்டு தாங்கிக்கொள்ள முடியாமல்தானே அவனது மூச்சு புயலாக மையம் கொண்டது.

ஒவ்வொருவரையும் மிக மென்மையாக நேசித்தஅவனிற்கு ஒரே இரவில் ஒன்பது ஊரவர்கள் கடற்படையால் குதறப்பட்ட சேதியை தாங்கிக் கொள்ள முடியாததாய் இருந்தது.

இந்த நிகழ்வு அவனின் நெஞ்சத்தை மட்டுமல்ல உயிரையே சுட்டது.

**- துளசிச்செல்வன் -**

அப்போது அவன் இயக்கவேலை காரணமாக மன்னாரில் நின்றான்.

ஒன்பது இரத்த உறவுகளும் ஒரேயடியாக வேட்டையாடப்பட்டனர் என்ற சோகம் தொலைத் தொடர்பு சாதனம் மூலம் தான் அவனிற்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் அதை நம்ப கஸ்ரமாக இருந்தது.

கடலில் அன்றாடம் மீன்பிடித்து வாழ்க்கை நடத்துகின்ற வெற்றிலைக்கேணி கிராமத்திலா இப்படி.

''அம்பாச்'' சொல்லி வலையிழுக்கும் சத்தமும், ''ஏலேலோ'' பாடி படகிழுக்கும் ஓசையும், கரைமுட்டி அலைபாடும ராகமும் காற்றில் சந்தோசமாக கலக்கின்ற ஊரிலா இப்போ ஒப்பாரி.

கரையிலேயே தவண்டு, அலையிலே நண்டு பிடித்து, கடலிலே தொழில் செய்த மண்ணிலையா இப்போ வெறியாட்டம்.

'அழுகுரலும், அவலமும் நிறைந்திருக்கும் ஊரைப்பார்த்து, நான் எப்படித் தாங்கிக் கொள்ளப்போறன்.'

ஒரு சில கணத்திற்குள் எத்தனையோ சிந்தனைமின்னல்கள் பளிச்சிட்டு மறைந்தன.

''அவங்கள் நினைச்சதைச் செய்து போட்டாங்கள். நான் நினைக்கிறதைச் செய்து முடிப்பன்''

அடிமனதில் இருந்து இறுக்கமான வார்த்தைகள் வெளிவந்த போது கண்கள் பிரகாசித்தன.

இயக்கம் வழங்கிய பணியினை முடித்துவிட்டு ஊர்திரும்பினான்.

மகன் கேட்டபோது அம்மா அதிர்ச்சியடையவில்லை. அவன் சின்னனில இருந்து எல்லோரிலும் பாசம் கொண்டவன் என்று அம்மாவிற்கு தெரியும்.

அம்மா அவன் பழகிய ஊர்ப்பொடியளை நித்திரையில் இருந்து எழுப்பி வந்தாள்.

முற்றத்தில் எல்லோரையும் வட்டமாய் இருத்தி மகனே எல்லோருக்கும் சாப்பாட்டைப் பகிர்ந்துகொடுத்தான்.

அம்மாவும் வாங்கிச் சாப்பிட்டாள். எல்லாம் முடிந்த பிறகு ''அம்மா காலமை வேளைக்கு என்னை எழுப்பிவிடு'' பாயிலே படுத்தான், ஆழமாக உறங்கினான்.

காலை விடிந்ததுமே சைக்கிளையும் எடுத்துக் கொண்டு அம்மாவிற்கு- அப்பாவிற்கு தங்கச்சிமாருக்கு, தம்பிமாருக்கென்று எல்லோருக்கும் தனியத் தனிய போட்டுவாறன் சொல்லி வாசல்வரை புறப்பட்டான்.

உடல் பிளந்து குழிகளிற்குள் கிடந்த சடலங்களிற்கு மண்ணள்ளிப் போடுகின்றபோது அவனது நெஞ்சுக்குள்ளேயே எடுத்துக்கொண்ட இலட்சியத்தின் மீது பலதடவை சத்தியம் செய்து கொண்டான்.

'எந்தக் கடற்படை இத்தனை உறவுகளின் சாவிற்கு காரணமாய் கோரத்தனம் புரிந்ததோ.

(09ஆம் பக்கம் பார்க்க)

( 08ஆம் பக்கத் தொடர்ச்சி )

## மண்பற்றும்...

எத்தக் கடற்படை அமைதியாய் இருந்த ஊரை அடிவயிற்றிலிருந்து ஓலமிட்டு ஒப்பாரி வைக்கச் செய்ததோ, அந்தக் கடற்படையை அழிக்கவேணும்.

அதன்பின் அவனது செய்கைகளில் மாற்றமிருந்தது. அவனிற்குள்ளேயே பற்றிக் கொண்ட இலட்சிய நெருப்பு அனல்கக்கத் தொடங்கியது.

தனது துடிப்பையும் உணர்வுக் குமுறலையும் தலைவரிற்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தினான்.

அனுமதி கிடைத்தது.

ஏற்கனவே உடலில் ஏராளமான விழுப்புண்கள் இருந்தாலும், அவன் உடலை வருத்தி பயிற்சிகளில் தீவிரம் காட்டினான்.

உப்புத் தண்ணீருக்குள் இரவுபகலாய் உடல் ஊறிக்கொண்டிருந்தது. ஊறி, நாளிற்கு நாள் வைரம் பெற்றது.

இதுவரை பெற்ற பயிற்சிகளின்படி எப்படியும் இலக்கை அழித்துவிடலாம் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனாலும் சிறிது கூட இந்த இலக்கை தவறவிடக்கூடாது என்று மனம் துடித்து, அவன் கடல்வேவு அணிகளுடன் சேர்ந்து வேவுபார்க்கச் சென்றான்.

இலக்கை கைகளால் தொடும் தூரம்வரை சென்று இலக்கை, அதன் அமைவிடத்தை அவனே பார்த்து உறுதிசெய்துகொண்டான்.

இந்த இலக்கை எப்போது அழிப்பது என்று தேதிகுறித்த பின்பே அவன், ஊரவரிற்கு, தன் பெற்றவருக்கு, உடன் பிறந்தவரிற்கு இறுதி விடைகொடுக்க வந்தான்.

ஊரவர்க்கு விடைசொல்லி, தன் உடன்பிறப்புக்களுக்கு விடை சொல்லி, பெற்றவர்க்கு விடை சொல்லி, தன்பிள்ளை மீண்டும் வருவான் எனத் தாய் காத்திருக்க அவன் முகாம் திரும்பினான்.

விடுமுறை முடித்து வந்த உடனேயே தாக்குதலிற்குச் செல்வதற்கு ஆயத்தமானான்.

எல்லா போராளிகளும், ஆரவாரமாகச் சிரிக்கும்படி செய்து தானும் கலகலவெனச் சிரித்தான்.

தலைவரைப் பற்றியும் எமது போராட்டம் வெல்லப்போவது பற்றியும் கூறிக்கூறி மகிழ்ந்தான்.

இறுதிநேரம் எல்லோரது இமைகளும் கசிந்தன.

இதயம் துடித்தது.

ஆனால் இலக்கினை நோக்கிச் செல்கின்ற கரும்புலிகள் மட்டும் சிரித்து எல்லோருக்கும் விடைகொடுத்தனர்.

அதிசிறப்பு நீரடி நீச்சல் பிரிவுகளான, கலோஜன் நீரடி நீச்சல் பிரிவிலிருந்து இரண்டு கரும்புலி வீரர்களும், அங்கயற்கண்ணி நீரடி நீச்சல் பிரிவிலிருந்து இரண்டு கரும்புலி வீராங்கனைகளுமாக, நான்கு கரும்புலிகளையும் சுமந்து படகு புறப்பட்டது.

கண்களிலிருந்து கரை மெல்ல மெல்ல மறையத்தொடங்கியது. அவனது மனதினில் கிராமங்களின் நினைவு நிறைந்திருந்தது.

அலைகளால் அணைக்கப்படுகின்ற கரையோர கிராமங்களை எல்லா கரும்புலிகளின் இமைகளும் வருடிச்சென்றன.

வெற்றிலைக்கேணிக் கிராமம் வந்ததும் தணிகைமாறன் தீயில் மிதித்தவனைப்போல எழுந்தான்.

அவனை அறியாது அவனது கட்டுவிரல் அந்தக் கிராமத்தைச் சுட்டியது. அவனது கண்களுக்குள் ஈரம் கசிவது தெரிந்தது. மெதுமெதுவாக அவனது உள்ளக்கிடக்கையைத் திறந்தான்.

''இதுதான் மச்சான் சின்னனில நான் பிறந்து வாழ்ந்த இடம். இதிலதான் என்ர உறவுகள் ஒன்பது பேரின்ர உயிரைக் குடிச்சவங்கள் ———'' அந்த இடத்தில் அவனைவிட வேறுயாரும் கதைக்கவில்லை. நீண்டதொரு மௌனத் திரை மூடியது.

''என்ர ஊரை அழிக்கப்போட்டு அதில குடியிருக்கிற இராணுவத்திற்கு துணையாக வந்து போற கடற்படையை அழிக்கத்தான் என்ர ஊரையும் தாண்டிப் போறன்'' அமைதித் திரையினைக் கலைத்து மறுபடியும் அவனின் குரலே பேசியது.



### கடற்கரும்புலி

## மேஜர் தணிகைமாறன்

### பங்குபற்றிய தாக்குதல்கள்

1) மூசல் குத்தி தேசத்துரோகிகளின் இராணுவ முகாம் தகர்ப்பு
2) பம்பைமடு தேசத்துரோகிகளின் இராணுவ முகாம் தகர்ப்பு
3) மண்டைதீவு சிறிலங்கா இராணுவத்துடன் நேரடிச்சமர்
4) யாழ் கோட்டைச்சமர்
5) ஆனையிறவு ஆகாய கடல் வெளிச்சமர்
6) மாமடு ( வவுனியா ) தொடர்காவலரண் தகர்ப்பு
7) சாகரவர்த்தனா கப்பல் மூழ்கடிப்புக்கு முழுமையான வேவுப்பணி

அந்த ஊரின்மேலே அவன் வைத்திருந்த பாசத்திற்காகத்தானே இன்று வெடிமருந்துப் பொதிகளோடு, அழித்தவர்களை அழிக்கச் சென்று கொண்டிருந்தான்.

''என்ர ஊரை அழிச்சவங்கள் எங்க இருந்தாலும் விடமாட்டன்.''

அவனின் ரோமங்கள் குத்தி நின்றன.

அவன் கூறி முடிக்கின்ற போது படகு அந்தக் கிராமத்தைத் தாண்டி நீண்ட தூரம் சென்றுவிட்டது.

நீண்ட தூரம் படகுகளும் அலையும் மட்டும் ஏதேதோ பேசிக்கொண்டு வந்தன.

கரும்புலிகள் படகில் இருந்து இறங்கி நீருக்கு அடியால் செல்லவேண்டிய தூரம் வந்துவிட்டது.

எல்லோரும் படகில் இருந்தவாறு வெடிமருந்துப்பொருட்களையும், வாயு உருளைகளையும் உடலோடு இறுக்கமாகக் கட்டினார்கள். முகத்தினைமூடி சுவாசக்கவசம் போடமுன் ஒருவரையொருவர் பார்த்து உறுதியாகப் புன்னகைத்துக் கொண்டனர். அவர்களது புன்னகைக்குப் பின்னால் பெரும் பூகம்பங்கள் உறங்கிக்கிடந்தன.

முகக்கவசங்களை அணிந்து கொண்டு ஒவ்வொருவரும் நீருக்கடியில் நீந்தத் தொடங்கினார்கள். நீர்க்குமிழிகளிற்கும் அலைகளிற்கும் மட்டுமே அந்த எரிமலைகளின் தடங்கள் தெரிந்தது.

கரும்புலிகள் நகரத் தொடங்கி கொஞ்ச நேரத்திற்குள் மழை 'சோ' வெனக் கொட்ட ஆரம்பித்தது. கடும்மழை.

காற்றுடன் கூடிய பெரும் மழை. இடையிடையே மின்னல் இருளைக் கிழித்து அலையைத் தொட்டது.

இடி, அமைதியைக் கலைத்து எங்கும் அதிர வைத்தது.

இயற்கையின் அமைதிக் கலைப்பு கரும்புலிகளின் நகர்விற்குத் துணைநின்றது.

துறைமுகத்தினுள் காவல் நின்ற கடற்படையினர் மழைக்கவசங்களோடு அங்குமிங்கும் எதையோ தேடுபவர்கள்போல நின்றார்கள்.

அதைவிட அந்தப் பகுதியை சுற்றிச்சுற்றி ரோந்துப் படகுகள வந்து போயின. அவற்றில் பொருத்தப்பட்ட பெரிய 'ராடர்கள்' மின்னல் வெளிச்சத்தில் பளிச்சிட்டன.

இத்தனை பாதுகாப்புக்களையும் மீறி கரும்புலிகள கப்பலைத் தொடும் தூரத்திற்குள் சென்றுவிட்டார்கள். இலக்கு தவறிவிடக்கூடாது என்பதற்காக ஒவ்வொரு வினாடிகளிலும் மிக அவதானமாகச் செயற்பட்டான் தணிகைமாறன்.

பெருங்காற்றிற்கு அலைகள் ஒருமுறை பொங்கிக் கொதித்தன.

"என்ர ஊரை அழிச்சவங்கள் எங்க இருந்தாலும் விடமாட்டன்" அவனது சபதம் நிறைவேற இதுவே நேரம். அமைதி. கடலினுள் ஒரே அமைதி. நேரம் நள்ளிரவு 12.45 மணி. திருகோணமலை துறைமுகமே ஒரு முறை குலுங்கி அடங்கியது.

அதிஉயர் பாதுகாப்பு வலயம் கடற்படையினரின் அவலக்குரலால் நிறைந்தது.

மீண்டும் ஐந்துநிமிட இடைவெளியில் இன்னொரு பெருவெடி.

''ரணசுரு'' 'சூரையா' என்ற இரண்டு போர்க்கப்பல்கள் கடலிற்குள் அமிழ்ந்தன.

அந்தத் திருகோணமலையில் தணிகைமாறனுடன் இணைந்து கரும்புலிகள் எழுப்பிய வெடிஅதிர்வு மூன்றாம் ஈழப்போரின் முரசொலியாய் அதிர்ந்தது. அது இத்தனை காலமும் பேச்சுக்கள், சமாதானம் என்று இழுத்தடிப்புச் செய்தவர்களிற்கு பிரபாகரன் படைகள் ஏமாளிகள் இல்லை என்று சொல்லி அதிர்ந்தது.

□ □

'' .. என்ர ஊரை அழிச்சவங்கள் எங்க இருந்தாலும் விடமாட்டன் '' நேரம் நள்ளிரவு 12.45 மணி, திருமலை துறைமுகமே ஒருமுறை குலுங்கி அடங்கியது. O

( 05ஆம் பக்கத் தொடர்ச்சி )

## விரிகின்ற...

கட்டுப்படுத்துவதும் போர்ப்பங்கெடுப்பு வீதத்தை (War participation Ratio) உயர்த்துவதும் வெற்றிக்கான அடிப்படை விடையங்களாக கருதப்படுகின்றன. இது எதிர்மாறாக அமையுமிடத்தில் படைத்துருப்புக்களின் போரிடும் மனநிலை பாதிக்கப்படுவதுடன் படையின் திட்டமிடல்களும் நெருக்கடியைச் சந்திக்கும். புலிகளின் இன்றைய புதிய போரியல் பரிமாணம் இத்தகைய விளைவுகளையே இராணுவத்தைப் பெறவைத்துள்ளது.

ஏற்கனவே வன்னிச்சமர் நடவடிக்கை வெற்றிக்கு படைத்தரப்பால் 20,000 துருப்புக்கள் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் புதிதாக உருவாகியுள்ள வன்னிச் சமர்க்களத்திற்கு அப்பால் புலிகளின் தாக்குதலுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும், தொடர்ச்சியான இழப்பால் படையினரின் பாதிக்கப்படும் மனோநிலையும், இழப்புகளுக்கான நிரப்பீட்டைப் பெற்றுக்கொள்ள முடியாத சூழலும், ஆக்கிரமிப்புப் பிரதேசத்தின் பிடி தளர்ந்து போகும் நிலையும், போரில் இராணுவத்தின் இயலாமை வெளிப்படுவதும், ஆட்திரட்டல் அடைந்த படுதோல்வியும், வன்னிச் சமரின் எதிர்கால வெற்றிகள் கேள்விக்குறியாவதும், வன்னியில் நிலைகொண்டுள்ள படைகள் புலிகளின் தாக்கியழிப்பு நடவடிக்கை அச்சுறுத்தலை எதிர்கொண்டு நிற்பதும் இன்றைய போரின் யதார்த்தமான தரிசனமாக உள்ளது. இந்நிலை இராணுவத்திற்கோ அரச தரப்பிற்கோ மோசமான விளைவுகளுக்கான சமிக்கையையே காட்டுவதாக உள்ளது.

தமது ஆளணி-ஆயுத வளத்திற்கேற்ப போரியலில் புதிய உத்திகளைக் கையாண்டு விடுதலைப்போராட்டத்தில் முன்னேறிவந்த வரலாற்றுப் பாரம்பரியம் தலைவர் பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் உள்ளது. இத்தகைய நிலையையே சமர்க்களம் இன்றும் கண்டுள்ளது. இராணுவத்தின் கணிப்புகள் அர்த்தமிழந்து போவதை இராணுவத்தரப்பு உணரவே செய்யும். புலிகளோ போரில் தமக்கான திருப்பு முனைக்கான காலத்தை உருவாக்கிக்கொண்டு வருகின்றனர்.

ஆயினும் எதிரிப்படைத் தரப்பிற்கு அரசியல் தேவை இராணுவ நடவடிக்கைகளை வற்புறுத்தும். ஆனால் அது புலிகளிடம் எவ்வாறான விளைவுகளைக் காணப்போகிறது, எத்தகைய மாற்றங்களை அது சமரில் உருவாக்கும் என்பதை புலிகளின் நடவடிக்கைகளே சமரில் வெளிப்படுத்தும்.

விரிந்த போரரங்கிற்கேற்பவும், பாதுகாப்புச் சமரிலும், தாக்கியழிப்புச் சமரிலும் ஈடுபடக்கூடியவாறான படைப்பல எண்ணிக்கையை புலிப்படை எட்டுமானால்- அதாவது மக்களின் போர்ப்பங்கெடுப்பு வீதம் இன்றைய நிலையில் இருந்து மேலும் அதிகரிக்கப்படுமேயானால் புலிகளின் படையில் அது உருவாக்கும் புதிய படைத்திரட்சி சமரில் எதிர்பாராத சக்தி மிக்க திருப்பு முனைகளை தமிழர் தரப்பிற்குப் பெற்றுத்தரும் வாய்ப்பையே இன்றைய கள யதார்த்தம் கொண்டுள்ளது. O

"ரணகோச - 5'' பலத்த எதிர்பார்ப்புடன் அரச, இராணுவ தரப்பால் செய்யப்பட்ட படை நடவடிக்கை, எதிர்பாராத மிகப் பெரியளவிலான இழப்புக்களோடு படுதோல்வியடைந்ததுடன், இராணுவத் தரப்பின் போரிடும் ஆற்றலை பலவீனப்படுத்தி புலிகளின் பலம் பற்றி இராணுவ உலகைப் பரபரப்புக்கொள்ள வைத்த நடவடிக்கையாக மாறியிருக்கிறது.

'ரணகோச -5' இராணுவ நடவடிக்கை யாழ்ப்பாணப் பாதை திறப்பிற்கான இரண்டாவது தெரிவாகிய பூநகரி - மன்னார் வீதியைப் பிடிப்பதற்கான நடவடிக்கையின் ஒரு கட்டம்; முக்கிய கட்டமென்று கருதப்படுவதும் கூட. அரசியல் தேவைக்காக குறுகிய காலத்தில் வெற்றியீட்டப்படவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ள நடவடிக்கையும் இதுதான். அரசாங்கத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கக் கூடிய நடவடிக்கையாகவும் கூட அரச தரப்பால் இது உணரப்படுகிறது. உறுதியான எதிர்பார்ப்புக்களுடன் நியமிக்கப்பட்ட புதிய நட

# மாறும் அதிகாரிகளும் மாறாத தோல்விகளும்

வடிக்கைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவினால் முன்னெடுக்கப்பட்ட முதலாவது நடவடிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டு வருடத்தைக் கடந்துவிட்ட பாதை பிடிப்புச் சமரில் நடவடிக்கைக் கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்ற நான்காவது தளபதி இவர். ஆரம்பத்தில் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா. பின், மேஜர் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய. அதன் பின் மேஜர் ஜெனரல் பல்லேகல, என இலக்கின் வெற்றியினறி நீண்ட அதிகாரி மாற்றத்தின வரிசையில் இப்போது மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா. அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் (National Defence College) சிறப்புக் கற்கைநெறியை முடித்துவிட்டு நாடு திரும்பிய வசந்த பெரேரா பலத்த எதிர்பார்ப்புக்களுடனும் அதீத நம்பிக்கையுடனும் நடவடிக்கைக் கட்டளைத் தளபதியாக பாதுகாப்பு அமைச்சால் நியமிக்கப்பட்டார். ஆனால் நடவடிக்கையடைந்த படுதோல்வி கட்டளை அதிகாரியின் படிப்பை மீள்பரிசீலனை செய்ய வேண்டுமா? இல்லை, புலிகளின் பலம் பற்றி தாம் கொண்டுள்ள கணிப்பை மீள்பரிசிலனை செய்யவேண்டுமா? என்ற கேள்விக்கு விடைகாண வேண்டிய தாக்கிவிட்டது.

''யுத்த முழக்கம்'' (ரணகோச) என சிங்கள இராணுவத்தினரால் பெயரிடப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையின் பெயரை தம தாக்குவதுபோல் புலிகள் களத்தில் முழங்கியுள்ளனர். யுத்த முழக்கத்தின் எதிரொலி சமரில் பங்குபற்றாத இராணுவத் துருப்புக்களின் மனநிலையைக் கூட சிதைக்கக்கூடியவாறு அதன் விளைவை இராணுவம் பெற்றுள்ளது. தமிழர் நிலம் மீது செலுத்தப்பட்ட 'யுத்த முழக்கம்' இராணுவ நடவடிக்கையை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது போல் வெற்றி முழக்கமாக முழங்குவதில் புலிகள் ஆரம்ப வெற்றியை ஈட்டியுள்ளனர்.


'ரணகோச - 5' நடவடிக்கை 12.09.99 அன்று காலை 5-45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. இதன் உடனடி இலக்காக சிராட்டிக்குளம், பெரியமடு, பள்ளமடு ஆகிய தொடர் நிலப்பரப்பை ஆக்கிரமித்து, அங்கிருந்து புலிகளைப் பின்தள்ளுவதுடன், வறண்ட காட்டுப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரை வசதியான நிலத்தில் நிலைகொள்ள வைத்து, பின் பள்ளமடுவை தளமாகக் கொண்டு மன்னார் - பூநகரி வீதியை நோக்கி முன்னேறுவதென இராணுவத் தரப்பால் இத்திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில், மும்முனையில் படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், இதற்கு திசை திருப்பும் நடவடிக்கையாக சிராட்டிக்குளத்திலிருந்து பள்ளமடு வரையான முன்னணிக் காவலரண்களில் இருந்து இராணுவம் ஒரே நேரத்தில் தாக்குதலை ஆரம்பித்தது.

வெட்டைப் பிரதேசமான சன்னார் குளத்தின் கிழக்குப்பகுதியில் 55வது டிவிசனின் கவசப் படைப் பிரிவு (Armoured Corps) 'ராங்கி'கள் சகிதம் ஒரு களமுனையைத் திறந்தது. சன்னார்

**- பிரபுத்திரன் -**

குளத்தின் மேற்குப்புறமான காட்டுப்பகுதியூடாக ஜெனரல் ரத்வத்தவினால் உருவாக்கப்பட்ட 53வது டிவிசனின் காட்டு அதிரடிப்படை (Jungle Commandos) மற்றுமொரு களமுனையைத் திறந்திருந்தது. சிராட்டிக்குளம் பகுதியிலிருந்து பள்ளமடுவிற்கு முன்னேறவேண்டிய நடவடிக்கையை 53வது டிவிசன் மேற்கொண்டது. மற்றைய இரு களமுனைகளும் இதற்கு உதவியாகவே திறக்கப்பட்டன. சிராட்டிக்குளத்திலிருந்து ஆரம்பமாகும் முன்னேற்றத்தைச் சாத்தியப்படுத்தும் வகையில் புலிகளின் முன்னணி நிலைகளைப்பிளந்து, நகரும் இப்படையணியுடன் அவை இணைந்து கொள்வதென்பதே திட்டமாக இருந்தது.

புலிகளுக்கு சாதகமற்ற பகுதியெனக் கருதப்படுவது இப்பிரதேசம். முற்றுமுழுதாக ஒரு மரபுப்படையணிக்கே சாதகமானது என்பதே பொதுவான கணிப்பு. 'ஒரு போரின் வெற்றியை அது சார்ந்த புவியலமைப்பு தீர்மானிக்கக் கூடிய சக்தியாக இருக்கிறது' என்பது போர் விதி. சாதகமான ஒரு நிலப்பரப்பில் பெருமளவு பீரங்கிகளையும், ராங்கிகளையும், பெரும் ஆளணிப் பலத்தையும் கொண்டு இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் புலிகள் கொடுத்த பதிலடி, தலைவர் பிரபாகரனின் போருபாயம் பற்றியும், புலிகளின் போரிடும் சக்தி பற்றியும் இராணுவ அவதானிகளை அதிர்ச்சிகொள்ள வைத்தது.




இழந்த இராணுவத்தினரின் உடல்கள் சிலவற்றையும் கைவிட்டு படையினர் பின்வாங்கினர்.

சிராட்டிக்குளம் பகுதியிலிருந்து புலிகளின் முன்னணி காவல் நிலைகளைப் பிளந்து பள்ளமடு நோக்கி முன்னேறும் 53 வது டிவிசன், காலை 7.30 மணிக்கு சண்டையைத் தொடங்கியது. இம்முயற்சிக்கு திசைதிருப்பு நடவடிக்கையாகவும், புலிகளின் பலத்தை ஒருங்கிணைக்க விடாது தடுப்பதற்காகவும் சிராட்டிக்குளத்திலிருந்து பள்ளமடு வரையான முன்னணி காவலரண்களிலிருந்து தாக்குதலை நடத்தத் தொடங்கினர் படையினர்.

பெரும் ஆளெண்ணிக்கை, வலுவான பீரங்கிச் சூட்டாதரவு என பெரும் பலப் பிரயோகத்துடன் முன்னேறிய இராணுவத்துடன் கடுமையான சண்டைகளில் இறங்கினர் புலிகள். குறித்தளவு தூரம் முன்னேறிவிட்ட இராணுவத்தை இடைமறித்து முன்னேற விடாது தடுப்பதில் மிகக் கடுமையான சண்டைகள் இடம்பெற்றன. பெரும் எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும் திட்டமிடப்பட்ட நடவடிக்கை இது என்பதால் இராணுவம் கடுமையான எதிர்ப்பின் மத்தியிலும் நின்று சண்டையிட்டது. இலக்கை அடைந்துவிடுவதில் நடவடிக்கையை வழிநடத்திய இராணுவத் தளபதிகள் தீவிரம் காட்டினர். பகல் முழுவதும் சண்டைகள் தொடர்ந்தன. பிற்பகல் பொழுதில் தீர்மானகரமான முறியடிப்புத் தாக்குதலில் புலிகள் இறங்கினர். மிகக் கடுமையான புலிகளின் முறியடிப்புத் தாக்குதலை முன்னேறிய 53 வது டிவிசன் சந்தித்தது.

சாதகமான நிலப்பரப்பு என்ற கணிப்புடனும் வளமான பலப்பிரயோகத்துடனும் முன்னேறிய இராணுவத்தை தமது போர் உத்தியாலும், போர் வலுவாலும் திணறடித்த புலிகள், இறுதியில் முன்னேறிய படையை சிதறடித்து சிதைத்து துவம்சம் செய்தனர். பிற்பகல் நடந்த தாக்குதலில் பாரிய இழப்புக்களுடன் ஆயுத தளபாடங்களையும், இறந்த இராணுவத்தினரின் உடல்களையும் கைவிட்டு பின்வாங்கினர் படையினர்.

காலை 5-45ற்கு சன்னார்குளம் பகுதியில் ராங்கிகளுடன் முன்னேறிய கவசப் படைப் பிரிவை எதிர்த்து காலை 7-30 மணியளவில் புலிகள் முறியடிப்புத் தாக்குதலில் இறங்கினர். பாதுகாப்புப் போர்முறையில் கவசத்துருப்புக்களின் முன்னேற்றத்தை முறியடிப்பதில் நன்கு பயிற்றப்பட்ட புலியணிகள் தீவிரமான சண்டையின் பின் அம்முனையில் இறக்கப்பட்ட களத்தைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர். ஒரு வெட்டைப் பிரதேசத்தில் இவ்வாறான ஒரு முறியடிப்பை படைத்தரப்பு எதிர்பார்த்திருக்கமாட்டாது. ஆயினும் புலிகள் அதைக் சாதித்தனர்.

சன்னார் குளத்தின் மேற்காக முன்னேறிய காட்டு அதிரடிப்படையினரை எதிர்கொண்ட புலிகள் கடுமையான சண்டையில் ஈடுபட்டனர். இப்பகுதி அடர்ந்த காட்டுப்பகுதியாகும். காட்டுப்போர் முறையில் நன்கு பயிற்றப்பட்ட 53 வது டிவிசனின் சிறப்புப் பிரிவாகிய காட்டு அதிரடிப்படையின் முன்னேற்றத்தை முறியடிப்பதற்கு தம்மை சுதாரித்துக்கொண்ட புலிகள், ரணகோச - 4 கட்டம் இரண்டில் இப்பகுதியில் நடந்த சண்டையில் ஏற்பட்ட இழப்போடு ஒப்பிடுகையில் மிகக் குறைந்த இழப்போடு அதே காட்டு அதிரடிப் படையை தமது தாக்குதலால் திணறடித்தனர்.

முதல் நாளிலேயே முறியடிக்கப்பட்ட ரணகோச-5 நடவடிக்கையின இழப்பு இராணுவத் தரப்பால் ஜீரணிக்க முடியாதது. சுமார் 150 இராணுவத்திற்குக் குறையாது கொல்லப்பட்டதுடன 900 பேர் காயப்பட்டனர். புலிகள், 23 இராணுவ உடல்கள் உட்பட பல ஆயுத தளபாடங்களையும் இந்நடவடிக்கையில் கைப்பற்றினர். ஆக, ஏறத்தாள 1000 பேர் வரையில் இந்நடவடிக்கையில் களத்தைவிட்டு அப்புறப்படுத்தப்பட்டனர். இராணுவம் ஆளணிப்பற்றாக் குறையை எதிர்நோக்கும்- வெளிப்படையாகவே அதை ஒப்புக்கொண்டு வரும் நிலையில் இவ்விழப்பு சாதாரணமானதல்ல. தொடரும் சமர்க்களத்திற்கு நல்ல விளைவைத் தரக்கூடியதுமல்ல. தவிரவும், இதனால் படைத் துருப்புகளிடம் ஏற்படக்கூடிய போர் மனநிலைச் சிதைவு இராணுவத்தரப்பால் ஈடுகட்ட முடியாததாகவும், எதிர்காலத்தில் பாரிய விளைவுகளைக் காணக்கூடியதாகவும் மாறக்கூடிய சிக்கலை ஏற்படுத்தி நிற்கிறது, ரணகோச-5 இன் விளைவு.

ஏற்கனவே இராணுவம் நிலைகொண்டிருந்த பகுதி இராணுவத்தின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத வறண்ட காட்டுப்பகுதியாகவே இருந்தது. →



'யுத்த முழக்கம்' படை நடவடிக்கைச் சமர்க்களத்தில் விடுதலைப் புலிகள்

# தனிமனித நதிகளால் பொங்கிப் பிரவகிக்கும் விடுதலைப் பெருநதி!

**- விதுஷா -**

கல்லூண்டாய் வெளியில் ஒரு வீரச்சாவு வீட்டுக்குத் தணிகைச் செல்வி என்னைக் கூட்டிப் போயிருந்தார். அந்தப் போராளியின் உடல் சேதமுற்றிருந்ததால் புகழுடல் பேழை மூடப்பட்டுக் கிடந்தது.

திறந்து உடலைக் காட்டாவிட்டால் பேழையை எடுத்துச் செல்ல விடமாட்டேன் என்று அந்தப் போராளியின் தந்தை பிடிவாதமாக நின்றார். மது போதையில் நின்ற அவர் பேழையைக் கொத்தித் திறக்கப் போவதாக கையில் கத்தியுடன் மிரட்டிக் கொண்டிருந்தார். அவருக்குக் கிட்டப் போக அஞ்சிக்கொண்டு குடும்பத்தவரும் அயலவரும் ஒதுங்கிநிற்க, தணிகைச் செல்வி அவரிடம் போனார்.

''அந்தாள் பொல்லாதது. உங்களையும் வெட்டிப் போட்டிடும். போக வேண்டாம்''

என்று அயலவர்கள் தடுக்க, ''இல்லை பிரச்சினை யில்லை, நான் பார்க்கிறேன்'' என்றவாறு அவரை நெருங்கிய தணிகைச் செல்வி, ''இருங்கோ அப்பா''

என்று அவரை ஒரு இருக்கையில் அமரச் செய்து, கையில் இருந்த கத்தியை வாங்கி வேறு பக்கம் வைத்துவிட்டு கதைக்கத் தொடங்க, அவர் உரத்த குரலில் ஏசத்தொடங்கினார். அவர் தனது கோபம்தீரும் வரையில் ஏசி ஓயும் வரை பொறுமையுடன் காத்திருந்த தணிகைச்செல்வி,

''நாங்களும் உங்கட பிள்ளையள்தானே அப்பா''

என்று தொடங்கி, ஆறுதலாக நிலைமையைக் கதைத்து விளக்க, அப்பா அமைதியாகி, தன் பிள்ளையின் இறுதி நிகழ்வுக்கு ஒத்துழைத்தார். தணிகைச்செல்வியின் பொறுமையையும், நிதானத்தையும், ஆளுமையையும் நான் அப்போதுதான் அருகே இருந்து பார்த்தேன்.

1989 இல் அவர் மணலாற்றுக் காட்டில் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இருக்கவில்லை. 1993 இல் வெளியே வந்து அரசியல் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கிய பின்னர் தான் அவரை அடிக்கடி சந்திக்கக் கூடியதாக இருந்தது. அப்போது அவர் யாழ். மாவட்ட (விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின்) அரசியல் நிர்வாகப் பொறுப்பாளராக இருந்தார்.

1996 இல் முல்லைப் படைத்தள அழிப்பு நடவடிக்கை நடந்த நேரம் அவர் அரசியல் வேலை செய்யும் அனைத்துப் பெண் போராளிகளினதும் பொறுப்பாளராக பணி ஆற்றினார். அந்தச் சண்டையின் போது அவர் என்னுடன் கலந்து கொண்டார்.

சண்டையின் நிலைமைக்கேற்ப 'அந்த இடத்துக்கு ரவைகள் தேவை. ஒழுங்கு செய்யுங்கோ' என்று சொன்னால் உடனடியாகவே ஒழுங்கு செய்வார். 'அந்த இடத்துக்கு ஆட்கள் தேவை. பார்த்து அனுப்புங்கோ' என்றால் உடனேயே வேகமாக ஒழுங்குசெய்வார். தேவைகளின் அவசியத்தைப் புரிந்துகொண்டு ஒரு சிறு பிள்ளைபோல் தானே ஓடி, ஓடி வேலை செய்தார். தன்னை ஒரு பொறுப்பாளராக நினைத்துக் கொண்டு வேறு யாரிடமும் வேலை சொல்லிவிட்டு நின்றுவிடவில்லை. தனக்கு அனுபவங்கள் வேண்டும் என்பதால் தனக்குத் தரப்பட்ட வேலைகளைத் தானே நேரடியாகச் செய்தார்.

அந்த நேரம் காயக்காரர்களை உடைந்த வீடொன்றுக்கு எடுத்து, அங்கிருந்து பின்னணிக்கு அனுப்பிக்கொண்டிருந்தோம். திடீரென அந்த வீட்டை நோக்கி ஆர்.பி.ஜி. தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. எதிரி எங்கிருந்து தாக்குகின்றான் என்பது உடனே தெரியவில்லை. அதே நேரம் ஒரு சிறு இராணுவ அணி நகர்ந்து வீட்டை ஒருபுறமாக வளைத்துக் தாக்க முயன்றது. அவ்விடத்தில் நின்றவர்கள் அந்த அணியுடன் சண்டையைத் தொடக்கிவிட, உடனேயே தணிகைச்செல்வி இரண்டு போராளிகளைக் கூட்டிக் கொண்டுபோய் நிலைமையை அவதானித்தவாறு நகர்ந்து, ஆர்.பி.ஜியுடன் எதிரி மறைந்திருந்த நிலையை இனங்கண்டு அவனைச் சுட்டு, எம்மீதான தாக்குதலை நிறுத்திவிட்டார்.

அந்த இடத்தின் நெருக்கடியை அவர் அந்த நேரம் நீக்கியிருக்காவிட்டால், இருந்த காயக்காரர்களையும் அகற்றமுடியாமல், இன்னும் புதிய காயக்காரர்களுடன் நிலைமை சிக்கலாகியிருக்கக்கூடும். ஆனால் நிலைமைக்கேற்ப செயற்படும் தணிகைச் செல்வியின் ஆற்றல், காயப்பட்ட நிலையில் அங்கிருந்தவர்களைக் காப்பாற்றிவிட்டது.

முல்லை வெற்றிச்சமர் முடிந்து, கிளிநொச்சி மீதான எதிரியின் 'உண்மை வெற்றி' நடவடிக்கை நடந்து கொண்டிருந்த காலத்தில், யாழ்ப்பாணத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருந்த பெண்கள் அணிக்குப் பொறுப்பாளராகத் தணிகைச் செல்வி நியமிக்கப்பட்டார். தலைவரால் நம்பிக்கையோடு தரப்பட்ட பொறுப்பு, அதைச் சரியாகச் செய்ய வேண்டும் என்ற அவாவில் எல்லோரிடமும் போய்க் கதைப் பார். தனக்குத் தெரியாதவற்றை தன்னிலும் இளைய போராளியிடம் கேட்டறிவதற்குக்கூட அவர் தயங்கியதில்லை.

''பொறுப்பாளர்கள் எப்போதும், எல்லோருக்கும் முன்மாதிரியாக இருக்கவேண்டும்''

என்று தலைவர் அடிக்கடி குறிப்பிடுவதை எப்போதும் மனதில் வைத்திருந்தார். ஒரு முறை புதிய வெடிகுண்டு ஒன்றை அதற்கு அதற்குரிய பொறுப்பாளர், தாக்குதல் பொறுப்பாளர்களுக்கு விளக்கி, அதை இயக்கும் முறை பற்றிச் சொல்லிக்கொடுத்தார். உடனேயே தணிகைச்செல்வி தான் இயக்குவதாகக் கூறி வாங்கி இயக்கினார். இயக்கிய முறையில் ஏற்பட்ட தவறால் அது முழுமையான செயல் விளைவைக் காட்டவில்லை. உடனே பொறுப்பாளர் தணிகைச்செல்வியின் தவறைச் சுட்டிக்காட்டி மறுபடியும் விளக்கினார். அதைப் புரிந்துகொண்ட தணிகைச்செல்வி தயங்காமல், தன்னை மற்றவர்கள் ஏதும் நினைப்பார்களோ என்று கூச்சப்படாமல், அடுத்த தடவையும் தானே முயன்று சரியாகச் செய்து விட்டார். தனக்கு விளங்கும் வரை திருப்பித் திருப்பிச் செய்வதற்கு, கேட்பதற்கு அவர் பின்னிற்பதேயில்லை.

யாழ்ப்பாணத்தில் நின்று வேலை செய்யும் பெண்போராளிகளையும், அந்தப் பணிக்கென மேலும் தன்னிடம் தரப்பட்டிருந்தவர்களையும் நல்ல ஒரு வளர்ச்சி நிலைக்கு கொண்டுவந்துவிட வேண்டுமென்ற ஒரே சிந்தனையுடன் இரவு பகல் பாராது தணிகைச்செல்வி ஓடி உழைத்த நாட்கள் அநேகம்.

ஓய்வையே நினைக்காமல் உழைத்தார். அவருக்குரிய நிர்வாகத் தளமும், தாக்குதல் அணிப் போராளிகள் நிற்குமிடமும் தேவை கருதிப் பல கிலோ மீற்றர்கள் தூர இடைவெளியிலேயே அமைந்திருந்தன. ஆலோசனை கேட்பதற்காக, உதவிகள் பெறுவதற்காக, வேலைகளை ஒழுங்கமைப்பதற்காக என்று பல்வேறு படையணிகளின் தளபதிகள், வேறு பொறுப்பாளர்களைச் சந்திக்கவென நாள்தோறும் நீண்ட பயணங்களைச் செய்யவேண்டியிருந்தது.

ஒருநாள் எங்கள் சக பொறுப்பாளர் ஒருவர் வீதியால் மோட்டார் சைக்கிளில் போய்க்கொண்டிருந்தபோது தணிகைச்செல்வி தன் மோட்டார் சைக்கிளை வீதியோரமாக நிறுத்திவிட்டு, ஆசனத்தில் அமர்ந்தபடியே கைபிடியில் முகத்தை வைத்துப் படுத்திருப்பதைக் கண்டார். அவரைத் தட்டி எழுப்பி,

''என்னக்கா, ஏதும் பிரச்சினையோ?''

என்று கேட்க, எழும்பி முகத்தைத் துடைத்தவாறே,

''இல்லை ஒரே அலுப்பாக இருந்தது. நித்திரையும் வந்துவிட்டுது. அதுதான் கொஞ்ச நேரம் படுத்தனான்''

என்று சொன்னவர், அவசரமாகப் போகவேண்டும் என்று உடனேயே விடைபெற்றுப் போய்விட்டார்.

கடைசி நாட்களில் அவரிடம் வந்து சேர்ந்திருந்த போராளிகளுக்கு சண்டை அனுபவங்களை ஏற்படுத்தி, யாழ்ப்பாணத்துக்கு கூட்டிப்போய், தாக்குதல்களை நடத்தி, ஏனைய தாக்குதல் அணிகள் ஊடுருவப் பாதைகள் அமைத்து, யாழ்ப்பாணம் பிடித்து — என்று பல கனவுகளைச் சுமந்து கொண்டு ———

ஒருநாள் தலைவரின் ஒன்றுகூடல் நடந்துகொண்டிருந்தது. எல்லோரையும் பார்த்தவாறு அவர் கதைத்துக்கொண்டிருந்தார். வெளியில் அலைந்த களைப்புடன் இருந்த தணிகைச்செல்வியைப் பார்த்ததும் உரையாடலை நிறுத்தி,

''ஏன் தணிகைச்செல்வி இப்பிடிக் காஞ்சுபோய் இருக்கிறீங்கள்?'' என்று கேட்டவர் உடனேயே,

''நீங்கள் (வெகு தொலைவிலிருந்த அவரின் தளமொன்றைக் குறிப்பிட்டு) நேரே அங்கேயிருந்து வருகிறீங்களோ?'' என்றார்.

தலைவருக்கு முன்னால் தான் அப்படி நிற்கின்றேனே என்று சங்கடப்பட்ட தணிகைச்செல்வி ''ஓமண்ணை'' என்று சொல்லிவிட்டு இருந்துவிட்டார்.

இப்படித்தான், கடைசிநாட்களில் தணிகைச்செல்வி தன்னைக்கூடக் கவனிக்காமல் வேலையிலேயே மூழ்கி ——

1999.06.26 இல் பள்ளமடுவில் சண்டைநடக்கும் என்பதை அறிந்தவுடனேயே, அங்கே நிற்கும் தன் அணியினர் சண்டை பிடிக்கும்போது, தான் அவர்களுக்கருகில் நிற்கவேண்டும் என்ற ஆதங்கத்துடன், இனி வரும் சமர்களை எதிர்கொள்வதற்கான அனுபவத்தைத் தரப்போகும் சண்டையில் அவர்களைச் சரியான முறையில் வழிநடத்த வேண்டும் என்ற ஆர்வத்தில் முதல்நாளிரவே வந்து சேர்ந்துவிட்டார்.

சண்டையில் தன் பிள்ளைளுடனேயே நின்று, அவர்களுக்கருகிலேயே போரிட்டு வீழ்ந்த லெப். கேணல் தணிகைச்செல்வியின் உணர்வுகளை வெறும் வார்த்தைகளில் எழுதிவிட முடியாது. ○

---

தண்ணீர் கூட இல்லாது வினியோக நடவடிக்கையில் பெருமளவு சிக்கலை இராணுவ பீடம் எதிர்கொண்டது. அதனால் படையினரிடம் ஏற்படும் போர்மனச்சிதைவை இம்முன்னேற்றத்தின் மூலம் தடுப்பதும் இந்நடவடிக்கையின் நோக்கமாக இருந்தது. இந்நடவடிக்கை, குறித்த இலக்கை அடைந்திருக்குமானால் இவ்வாறான பிரச்சனை தீர்க்கப்பட்டிருக்கும். மாறாக, நடவடிக்கையின் விளைவு மேலும் படைத்துருப்புக்களை மோசமான பாதிப்பிற்குள்ளாக்கக்கூடியவாறு அமைந்ததும், மீண்டும் அதே சிக்கல்நிறைந்த பகுதியில் முன்னணி நிலையில் படைத்துருப்புக்களை ஈடுபடுத்தவேண்டியிருப்பதும் மேலும், மேலும் தலையிடியை படைத்தலைமைப் பீடத்திற்கு கொடுத்துள்ளது.

இந்நிலையில் பாதை பிடிப்புச் சமரில் இரண்டாவது தெரிவான மன்னார்-பூநகரி வீதி பிடிப்பிற்கு இது தெளிவான தோல்விக்கான சமிக்கையையே காட்டுகிறது இதை படைத்தரப்பு உணர்ந்து கொள்ளுமா? இல்லை, வரிந்துகட்டிக்கொண்டு முன்னேற முயன்று தன் பலத்தின் முழுமையையும் அழித்துக் கொள்ளுமா? என்பதுதான் கேள்வி. எப்படியாயினும் பாதுகாப்பமைச்சு மேஜர் ஜெனரல் வசந்த பேரேராவை களமுனையை மூடுவதற்காகவோ திட்டத்தை கைவிடுவதற்காகவோ நடவடிக்கைக் கட்டளைத் தளபதியாக நியமிக்கவில்லை. எனவே அரசின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவே அவர் முனைவார். இந்நடவடிக்கை பற்றிய அவரது விமர்சனம் அதையே காட்டுகிறது.

''ரணகோச-5, ஏற்கனவே திட்டமிடப்பட்ட நடவடிக்கையை நான் செய்தேனே தவிர, எனது திட்டமல்ல'' என வசந்த பெரேரா இப்போது குத்துக்கரணம் அடித்துள்ளார். ஒரு நடவடிக்கைக் கட்டளைத் தளபதி இத்தகைய இழப்பை ஏற்கனவே கணித்திருந்தால் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது சரியானதா? அவ்வாறு இழப்பை எதிர்பார்க்காது விட்டிருந்தால் இத்திட்டத்தை வெற்றிக்கான நம்பிக்கையோடு செய்ய முனைந்தார் என்பதைவிட வேறு எவ்வாறு கூறுவது?! இவை ஒருபக்கமிருக்க வசந்த பெரேரா தனது தலைமையில் புலிகளிடம் அடிவாங்கியதும் இதுதான் முதற்தடவையுமல்ல.

ஜயசிக்குறுயின் ஆரம்பக் கட்டத்தில் 53வது டிவிசன் தளபதியாக வசந்த பெரேரா இருந்த போது நெடுங்கேணிப் பகுதி முன்னேற்றத்தில் மிகக் கடுமையான இழப்புகளைப் புலிகளிடமிருந்து சந்தித்தார். இதைவிட 5-9.10.97 கரப்புக்குத்தி- விஞ்ஞானகுளம் மீதான புலிகளின் தாக்குதலில் 5 நாள் சண்டையில் 500 இராணுவம் கொல்லப்பட்டதோடு மிகப் பெருந்தொகையான ஆயுத தளபாடங்களைப் புலிகள் கைப்பற்றியதுமல்லாமல், வசந்த பெரேராவின் பிரத்தியேக கட்டளை வாகனத்தையும் விட்டு ஓடவேண்டிய நிலை அவருக்கு அப்போது ஏற்பட்டது. அடுத்து 4.12 97 மன்னகுளத்தில் முன்னேறிய விசேட அதிரடிப்படை மீதான புலிகளின் முறியடிப்பில் 300 இராணுவம் கொல்லப்பட்டதோடு அதைவிட அதிகமானோர் காயப்பட்டனர். அதுவும் இவரது வழிநடத்தலில் முன்னேறிய இராணுவமேயாகும் என்பது நினைவு கூரத்தக்கது. இப்போது ரணகோச-5, அடுத்து —?

எப்படியோ, புலிகளின் போர்வலுவையும் ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு இருக்கக் கூடிய தார்மீகப் பலத்தையும் அரசு உணராத வரை இராணுவ நடவடிக்கைகள் தொடரலாம். ஆனால், அவை அடையப்போகும் விளைவுகள், அடைந்த விளைவுகளைவிட அதிகமானதாகவே இருக்கும். ஒருவேளை அரசு அதை உணர்ந்து கொள்ள அதிக இழப்புக்கள் தேவையானதாகக்கூட இருக்கலாம். ○

# எரிமலை வாசலில் இருக்கின்றாய் என்றுநீ அறியாமல் சிரிக்கின்றாய்

## உலைக்களம்

— வியாசன் —

முன்னொரு காலத்தில்
பாசிபடர்ந்த பாழும் கிணறாய்
தூசிபடிந்த தூண்டாமணி விளக்காய்
பெருவிதியிதுவெனப் பேசாதிருந்தது எம்தேசம்.
கைகட்டி, வாயும்பொத்தி,
மெய்யுமொடுங்கிக் கிடந்தது எம்மண்.
வருவோரெவரெனினும் வரிசையில் நின்று
வாழ்த்துப்பாடியது எம்வாசல்.
வெள்ளைக்காரனுக்கு வெள்ளாடைவிரித்து
கல்லொழுங்கைகளெல்லாம் கைகுலுக்கிக்கொண்டன.
சிங்களவரிடம் எம்தேசம் கைமாறியபோதும்
அங்கிருந்து வந்த அனைவருக்கும் ஆராத்தி சுற்றியது.
தலைப்பாகை கட்டிய தலைவர்கள் எல்லோருக்கும்
நிலபாவாடை விரித்தது எம்நிலம்.
நேற்று: காண்டை பரவிய கருவேலங்காடு என்றவனே
இன்று: நோண்டிப்பார் தெரியும் முள்ளேறும் நோவு.
தூங்கித்தான் கிடந்ததெம் தேசம்.
துணிவின்றித்தான் இருந்ததெம் தோள்கள்.
ஏழில் செவ்வாய்,
ஏழரைச்சனியன்,
குருபார்வை வக்கிரமெனக் குறிப்பெழுதிய மண்ணை
நெருப்பென நிமிரவைத்தது ஒரு கைவிளக்கு.
சாவுப்பயத்தில் சன்னியே பிடித்திருந்த தேசத்துக்கு
பள்ளியெழுச்சி பாடினாரெம் பிள்ளைகள்.



புழுதி [illegible]சலெனக் கிடந்த தெருவை
எழுது பூ[illegible]தியென எழுப்பினர் புலிகள்.
மலையென எழுந்தது எம்[illegible]
பாம்படிக்கக்[illegible] பதுங்கி [illegible] தேசம்,
கோழிதிருகக் [illegible] ஆட்பிடித்தகுலம்,
முட்டைபாலை[illegible]
முருக்கங்காய் மச்சம்[illegible]
மட்டத்தேள் [illegible] பயப்படுவதற்குரிய [illegible]
பயத்துக்குப் பல்லினமாகக் காரணங்களைக் கூறி
வியர்த்துக் கிடந்த தேசம் [illegible] விரிந்துக்கொண்டது.
எமக்குள்ளே ஆயிரம் பிரிவுகள்.
எமக்குள்ளே ஆயிரம் பேதங்கள்.
ஒன்றாகமுடியாதவாறு உருவகித்த கற்பிதங்கள்.
இன்று எல்லாமே இற்று விழுந்தன.
காலத்துக்கொவ்வாதன கரையொதுங்க
நுங்கும் நுரையுமாகப் பொங்கிப் பாய்கிறது
எங்கள் கங்கை.
இது விடுதலை அவாவிய வேகம்.
எம்தாயகம் மீட்டும்போதே [illegible]விழும்.
சங்கமிக்கச் சம்மதிக்கும்
அதுவரையும் பாயும் ... அடங்காது.
யாரும் தடுத்து அணைபோட நினைத்தால்
அணையை மட்டுமல்ல
அணைபோட நினைக்கும் 'எஞ்சினியர்களையும்'
அள்ளிச்செல்லும்.
இத்தனை வேகம் ஏன் வந்தது?
புரண்டோடும் கங்கையின் நதிமூலம் என்ன?
தருவதைத் தாருங்கள் எடுத்துக் கொள்வோமென
ஐம்பதில் கேட்டது எம்மண்.
சேனநாயக்காவுக்குக் குதிரையேறிய செருக்கு
காதில் விழவில்லை.
ஒரு நாடு இரு ஆட்சி இது போதுமென
அறுபதில் கேட்டது எம்தேசம்.
பண்டாரநாயக்காவுக்கும் கண்டியத்திமிர்
காதில் விழவில்லை.
எல்லாப் பாவங்களையும் தலையிற் சுமந்தபடி
இன்று தள்ளுவண்டியிற் சஞ்சரிக்கும் சிறிமாவிடமும்
சேர்ந்துவாழ முடியுமென்றே சொன்னது எம்தேசம்.
இளமை மிடுக்காலும், இதிகாசப் பெருமையாலும்
ஆச்சிக்கும் அன்று காதில் விழவில்லை.
சண்டைக்குத்தயாரா? என்று வந்தார் ஜே.ஆர்.
இன்றுவரை நீளும் சமருக்கு இவர்தான் பதியம் போட்டவர்.
இவருக்கு மூக்குமட்டும் மூன்றடி.
காதுகளைக் கணக்கிலெடுக்க வில்லை:
பின்னர் பிரேமதாசா.
இன்று சந்திரிகா.

கையேந்திய போதே தந்திருந்தால்
ஈழத்தமிழன் இன்றும் நன்றியுடனிருந்திருப்பான்.
எல்லோருக்கும் தமிழனென்றால் இளக்காரம்.
சிங்களத்துத் திமிர்.
ஆளுவோரென்ற மமதை.
தமிழன் சாக்கடை அள்ளவந்தோனென்ற ஏகத்தாளம்:
பயந்தவன் தமிழனெனும் படிமம்.
கொழுப்புப் பிடித்து கொழும்பு குதிக்கத் தொடங்கியதும்
எமக்குள்ளும் விழிப்புக்கொண்டது விடுதலையுணர்வு:
நாலுபேருடன் வந்து உன்னாலன்று
யாழ்ப்பாணத்தையே எரித்துப் போக முடிந்தது.
நாற்பதினாயிரமாய் வந்து வன்னியில் நிற்கிறாய்
உள்ளேவர உன்னால் முடியவில்லையே.
இன்றுதான் தமிழர் தமிழராயினர்
இன்றுதான் தமிழர் புலிகளாயினர்:
சந்திரிகா
நேற்றுவரை நிவாரண வரிசையிலும்
காட்டுமரத்தின் கீழும்
போட்டது போட்டபடி கிடந்த தமிழனை
போருக்கெழவைத்த புண்ணியவதி.
அடுப்பிலும் நெருப்பிலும் வெந்து
உரலும் உலக்கையுமாக இருந்த தமிழச்சியை
ஆயுதமேந்தச் செய்த அம்மை.
வேட்டைத்துவக்குக்கே வெருண்டடித்த தமிழரை
''ஏகே நாற்பத்தேழு'' ஏந்தவைத்த பெருமாட்டி:
ஆயிரமாயிரம் வருடங்களுக்குப் பின்னர்
மீண்டுமொரு குருசேத்திரம்.
இழந்ததை மீட்கும் யுத்தம்.
தர்மப்போருக்கு வன்னி தயாராகிவிட்டது.
ஊரெங்கும் உலைமுகங்கள் மூட்டி
அங்கெல்லாம் ஆயுதங்களின் அணிவகுப்பு:
வேறு வடிவில்
வேறு பெயரில் தருமன்.
வேறு வடிவிலும்
வேறு பெயரிலும்
பெரு வாரியான தளகர்த்தர்கள்.
மகாரதர்களுக்குப் பின்னே மக்கள் சேனை:
அஸ்திரப்பயிற்சி முடிந்ததும் அணிவகுப்பு.
காதல் மொழிகள் வழக்கொழிந்து போக
களமொழிகளே இப்போது காதில் விழுகிறது:
கணவன் மனைவியின் கட்டில் மொழியேகூட
போரின் மொழியானது எம் பூமியில்.
சாதி மறந்தார்.
மதம் மறந்தார்:
சாத்திரம் கோத்திரம் யாவும் மறந்தார்.
ஆணா? பெண்ணா? எல்லோரும் ஒரு நிறை.
ஏழையா? பணக்காரனா?
எல்லோரும் ஒரு விலை.
அலையடிக்கும் கடலாய் ஆர்ப்பரிக்கிறது
தமிழர் படை.
''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ தென்பது இழுக்கு.''
வன்னிக்கானது இந்த வள்ளுவவாக்கு:
பீறிட்டெழும் பூகம்பவாசலென்றறியாது
எரிமலைச் சிகரமேறி எக்காள மிட்டபடி
அகலக்கால் பரத்தி நிற்கிறது ஆணவம்.
சுற்றி வேலியிட்டேன் என்ற இறுமாப்பில்
குருகுருக்கிறது ஆதிக்கம்.
விரைவில்
வெடித்துப் பிளம்பாகி வெளிவரும் நெருப்புக் குழம்பு.
இடியும் மழையுமாகப் பொழியுமெம் மேகம்.
வாரியடித்துப் போகும் வல்லமை வெள்ளத்தில்
பாறிச்சரிந்து விழும் பகைச்சேனை.
''மீண்டும் தொடங்கும் மிடுக்கோடு''
பாடி நகரும் புலிச்சேனை.
காலிற் துகள்படும் சருகாய்
மிதிபட்டழியும் முள்வேலி.